www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு : 10 கடிதம் : 12

தி.பி. 2027 சிலை (மார்கழி)

திசம்பர் - 1996 ரூ. 4.00



சோ : ஈழத்தமிழர் மாநாடு நடத்துமளவு தமிழர்களுக்குக் கொழுப்பேறி விட்டதா?

கலைஞர் : எனக்குத் தெரியாதா? இரண்டு பேரை சிறையில் அடைத்து விட்டேனே!

படிப்பகம்

www.padippakam.com

# நிறை - குறை

## சாட்டையடி

'எது புரட்சி' என்ற இன்குலாப் கவிதை - போலிகளுக்கு நல்ல சாட்டையடி, 'தமிழ்த் தேசியமும் தெலுங்கரும்' கட்டுரை குழப்ப வாதிகளால் பாதிக்கப்பட்டோர்க்குத் தெளிவு கொடுக்கும்'.

இளங்கதிரின் அரசியலில் சொந்தங்கள் இனியாவது தொடர்ந்து வரட்டும்.

'சரஸ்வதி ஓவியமும் சனாதனக் காவியமும்' என்ற பரிமுதல்வன் கட்டுரை மற்ற விமர்சனங் களிலிருந்து மாறுபட்டு சிறப்பாக உள்ளது.



- தஞ்சை வளவன்
தஞ்சாவூர்-1.

---

காவிரிச்சிக்கல் குறித்து எழுதியிருந்தது மிக நன்றாக இருந்தது. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற பெரியாரின் கருத்து பற்றிய விளக்கத்தை எதிர் பார்க்கிறேன்.

- பா. இளம்பரிதி
அரக்கோணம்.

---

## ''நூல் புதிது ''

### வரலாற்றில் தமிழ் ஈழம்

உணர்ச்சிக் கவிஞர் **சிங்காரவேலன்**

ஈழத்தமிழர்கள் அந்நாட்டின் தொல்குடிகள் என்று நிறுவுகிறார் நூலாசிரியர்

முதல் பிரதமர் டி. எல். சேனநாயகா தொடங்கி தற்போதுள்ள குடியரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா வரை உள்ள சிங்கள ஆட்சியாளர்கள் ஒப்பந்தம் - உரிமை அளிப்பு என்ற பெயரில் ஏமாற்றியதை வரிசைப் படுத்துகிறது இந்நூல்.

உணர்ச்சிக் கவிஞர் ஆனதால் அங்கங்கே, சான்றாதாரங்களைவிடவும் உணர்ச்சிகள் கொப்பளிக்கின்றன.

பக்கம் 184+4 விலை ரூ 40.00

கிடைக்குமிடம்:
**உணர்ச்சிக் கவிஞர் பதிப்பகம்**
2, காவேரி சாலை
தேவதானம்
திருச்சிராப்பள்ளி - 620 002.

---

## தீண்டாமை ஒழிப்பு-தமிழர் ஒற்றுமை மாநாடு ஒத்திவைப்பு

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் டிசம்பர் 25,1996-ல் திருத்துறைப் பூண்டியில் நடைபெறுவிருந்த தீண்டாமை ஒழிப்பு தமிழர் ஒற்றுமை மாநாடு பெருமழை, வெள்ளம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மாநாடு அதே அரங்கில் பிப்ரவரி, 22, 1997 அன்று நடைபெறும்.

சிரமத்தைப் பொறுத்துக் கொண்டு ஒத்துழைப்புதாருங்கள்.

- வரவேற்புக்குழு.

படிப்பகம்

www.padippakam.com

தமிழர்
கண்ணோட்டம்
அனைத்துத் தொடர்புகளுக்கும்

ஆசிரியர்
பெ. மணியரசன்
53, (அ) சமீந்தார்குடியிருப்பு
புது ஆற்றுச்சாலை,
தஞ்சாவூர் -613 001.

வெளியிடுபவர் :
அ. பத்மநாபன்
625, என்.வி.என் நகர்
திருமங்கலம்,
அண்ணாநகர் (மேற்கு)
சென்னை -43.

அச்சிட்டோர் :
நீட் பிரிண்டர்ஸ்
சென்னை -600 003.

## உள்ளே......

- நாவரசு கொலை நவிலும் செய்திகள்
- அரசியல் சொந்தங்கள்
- சிலை செதுக்கும் பிக்காசு
- தமிழகம் தாழ்த்தப்பட்டோரும் சில தகவல்கள்
- புலிகள் பயங்கரவாதிகளா?
- தலித் பண்பாடு 2
- இன்குலாப் கவிதை

## ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடும் கருத்துரிமை படும்பாடும்

1996 நவம்பர் 19 சென்னை ஜெர்மன் அரங்கில்நடந்த 'ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு' மற்றுமொரு மாநாடாக அமைந்து விடாமல் சில அதிர்வுகளைப்பதிவு செய்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி ஏற்பாடு செய்த இம்மாநாடு தொடங்குவதற்கு முன் அன்று காலைவந்த 'இந்து' நாளிதழில் காவல்துறைத் தலைவரின் கடுமையான எச்சரிக்கை வந்திருந்தது. மாநாட்டில் விடுதலைப் புலிகளை ஆதரித்தோ, பிரபாகரனைப் பாராட்டியோ பேசினால், உடனே கைது செய்வோம் என்று காவல்துறை தலைமைஇயக்குநர் ராஜசேகரன் நாயர் எச்சரிக்கை விடுத்திருந்தார். மாநாட்டு மண்டபத்திற்கு முன்னரும், வழியிலும் பெரும் எண்ணிக்கையில் காவலர் குவிக்கப்பட்டிருந்தனர்.

மாநாடு முடிந்த மறுநாளிலிருந்து இந்தியாவிற்கு எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டதுபோல், பார்ப்பனீயப் பத்திரிக்கைகள் அலறத் தொடங்கின. 'விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பகிரங்கப் பிரச்சாரம்' பிரபாகரனைப் புகழும் பேச்சுகள்', 'தேச விரோத மாநாடு' 'எப்படி அனுமதிக்கலாம் மாநாட்டை', இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா', என்பன போன்ற கொக்கரிப்புகள் வெளிவந்தன. மாநாட்டில் பேசியவர்களைக் கைது செய்யும்வரை விடுவதில்லை என்ற நோக்கில் 'இந்து' நாளிதழ் தொடர்ச்சியான, 'பிரச்சார இயக்கம்' நடத்தியது. 'துக்ளக்' முன் அட்டை தொடங்கி முடிவுப்பக்கம் வரை மாநாட்டைக் கொச்சைப்படுத்தி சிறப்பு மலரே வெளியிட்டது. கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் இதழ்கள் நடவடிக்கை கோரி ஆசிரிய 'உரை தீட்டின.

கலைஞர் கருணாநிதி அரசு அம்மாநாட்டில் பேசியதற்காக தமிழ் தமிழர் இயக்கத் தலைவர் பேராசியர். சுப. வீரபாண்டியன் அவர்களை 5-12-96 நள்ளிரவில் கைது செய்தது. அதுபற்றி செய்திக்குறிப்பு வெளியிட்ட மாநகரக் காவல் ஆணையர், பேராசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# சுப.வீ .பெ.ம. கைது

## தமிழகமெங்கும் கண்டனம்

சென்னை ஜெர்மன் அரங்கில் 19,12.96 பா.ம.க. நடத்திய ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசினார்கள் என்ற குற்றச் சாட்டில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் 5.12.96லும் தோழர் பெ.மணியரசன் 9.12.96விலும் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

பேச்சுரிமைக்கும் தமிழ் இன உரிமைக்கும் எதிரான தமிழக அரசின் இந்நடவடிக்கையை எதிர்த்துத் தமிழக மெங்கும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

திரு. பழ . நெடுமாறன், டாக்டர் இராமதாஸ், திரு. வை. கோபால்சாமி ஆகியோர் கண்டன அறிக்கை வெளியிட்டனர்.

தமிழ் தமிழர் இயக்கம் மதுரை, சென்னை மற்றும் பல ஊர்களிலும் கண்டனச் சுவரொட்டி ஒட்டியது.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி சிதம்பரம், மயிலம், திண்டிவனம், சோத்துப்பாக்கம், சென்னை, காஞ்சிபுரம், தஞ்சைமாவட்டம், திருத்துறை பூண்டி, திருச்செந்தூர் சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் கண்டனச் சுவரொட்டி ஒட்டியது.

தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சி தமிழ்நாட்டின் பல பகுதிகளில் பரவலாகக் கண்டனச் சுவரொட்டி ஒட்டியது.

குடந்தை தமிழர் ஒற்றுமைக் கூட்டமைப்பு கண்டனச் சுவரொட்டி ஒட்டியது.

10.12.96 அன்று சென்னையில் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் நடந்த தமிழ் ஈழவிடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு, மேற்படி கைதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

வேலூரில் நடந்த மக்கள் கலை இலக்கியக் கழக மாநாடு கைதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

### கண்டனக் கூட்டங்கள்

தஞ்சையில் 16.12.96 அன்று எழுச்சிமிக்கக் கண்டன ஊர்வலம் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி சார்பில் நடந்தது. கண்டன ஊர்வலத்தில் இறுதியில் உரையாற்றிய த.தே.பொ.க. மாவட்டச் செயலர் தோழர் க. பழநிமாணிக்கம் தமிழர் தேசிய இயக்கத் தஞ்சை மாவட்டத் தலைவர் தோழர் அய்யனாபுரம் முருகேசன் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சியின் பெரியார். சேலம் மாவட்ட அமைப்பு சார்பில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் 20.12.96 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தி கைதைக்கண்டித்தனர். பல்வேறு அமைப்பினர் கலந்து கொண்டனர்.

தா.நா.மா. லெ.க. கோவை. நீலமலை அமைப்பு சார்பில் 23.12.96 கோவை செஞ்சிலுவைச் சங்கக் கட்டிடத்தில் கண்டனம் கூட்டம் நடந்தது. பல்வேறு தமிழ் அமைப்புகளும் ஜனநாயக அமைப்புகளும் கலந்து கொண்டனர்.

தோழர் சுப. வீரபாண்டியன், பெ. மணியரசன் இருவரும் 21-12-96 பிணையவில் விடுதலை ஆனார்கள்.

மேலும் செய்திகள் வந்துள்ளன. அவை அடுத்த இதழில் வரும்.



படிப்பகம்

www.padippakam.com

# நாவரசு கொலை நவிலும் செய்திகள்

- பரிமுதல்வன் -

பலியானது சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரின் மகனா அல்லது சாதாரண சராசரி குடிமகனின் மகனா என்பது முக்கியமில்லை.

ஒரு தளிர் முற்றி பூத்து காய்த்து பழுத்து உதிர வேண்டிய தளிர். படித்து பட்டம் பெற்று தான் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்து, வாழ்வை அனுபவித்து வாழ்வின் முழுமையை நோக்கிப் பயணித்து மறைய வேண்டிய ஒரு உயிர் பிஞ்சிலேயே பலி யர்க்கப்பட்டு விட்டது.



எல்லாவற்றுக்கும் காரணம் மாணவச் சமூகத்தினரிடையே பரவி வரும் தனிநபர் வன்முறை வக்கிர உணர்வு. ராகிங் என்கிற பெயராலோ அல்லாமலோ பாலியல் வக்கிரங்களுக்கும் வன்முறைகளுக்குமான மனோ நிலைக்கு உள்ளாகி அடுத்தவர்களை துன்புறுத்தி அதிலே அகமகிழ்ந்து திருப்தி கொள்ளும் 'சாடிச' மனோபாவம்.

இப்படிப்பட்ட நிகழ்வுகளின் உச்சம் இந்த ஆண்டு நாவரசன் சம்பவம்.

சமூக நோக்கில் இதையொட்டி எழும் கேள்விகள் பல.

அன்பும் மனித நேயமும் கொண்ட மென்மை மனம் கொண்டவர்களாக வளர வேண்டிய, வளர்க்கப்பட வேண்டிய பிஞ்சு நெஞ்சங்கள் வன்முறையும் வக்கிர உணர்வும் முரட்டுத் தனமும் கொண்ட கரட்டு நெஞ்சங்களாக உருவாவது ஏன்?

சக மனிதனை நேசித்து அவனது சுக துக்கங்களிலே பங்கு கொள்ள வேண்டிய மனிதர்கள் தங்களுக் குள்ளே பகை யுணர்ச்சியை வளர்த்து பிற மனிதன் வதை படுவதைக் காண்பதிலே சுகம் காணவைப்பவர்களாக மாற்றுவது எது?

எல்லாவற்றுக்கும் காரணம் வாழ்க்கைச் சூழல் வளர்ப்பு முறை. பெற்றோர்கள் பள்ளிகள் வளர்ப்பு முறை, சுற்றுப்புறங்கள் வர்த்தக எழுத்துக்கள் வன்முறைக்குத் தீனி போடும் வர்த்தக எழுத்துக்கள் வெள்ளித் திரை, சின்னத் திரை முதலான மீடியாக்கள். பிறக்கிற படிக்கிற பிள்ளைகள் எல்லாமே டாக்டர்களாக என்ஜினீயர்களாக மட்டுமே ஆகிவிட வேண்டும் என்கிற நுகர் கலாச்சார பாதிப்புக்கள்.

இதனால் இளம் உள்ளங்களை அவர்களையும் இதயமுள்ளவர்களாகப் பாவித்து அவர்களின் தனித் தன்மையைப் புரிந்து அதற்குத் தக்க அவர்களை உருவாக்கு வதற்கு மாறாக பெற்றோர்கள் தங்கள் விருப்பங்களை ஈடேற்றும் நோக்கில்



படிப்பகம்

www.padippakam.com

பிள்ளைகளை இளம் வயதிலிருந்தே தேவையற்ற கட்டு திட்டங்களைக் கைக் கொண்டோ கெடுபிடிகளைத் கைக் கொண்டோ அல்லது தங்களால் முடியாவிட் டால் அப்படிப்பட்ட செயலாக்கத் திறன் கொண்ட விடுதிகளிலே சேர்த்தோ மேற்கொள்ளும் நடவடிக்கைகள், எல்லாம் தங்கள் பிள்ளைகள் எந்த தப்புத் தண்டாவுக் கும் போகாமல் ஒளிமயமான எதிர்காலத்தை பெற வேண்டும் என்கிற நல்ல நோக்கில் மேற்கொள்ளப்படுபவை தான் என்றாலும் எல்லோராலும் இது சீரணித்துக் கொள்ளப்படுவதில்லை.

பெற்றோர்களிடம் அன்பையும் பாசத்தையும் எதிர்பார்க்கிற பிள்ளைகளுக்கு அதிகாரத்தையும் கெடு பிடிகளையும், இதன் காரணமாகவே பல நேரங்களில் அளவுக் கதிகமான பரிசாக வழங்குவது, வீட்டில் அவர்களுக்குப் பிடிப்பற்றத் தன்மையையும் பெற்றோர்களிடம் பற்றற்ற தன்மையையும் ஏற்படுத்துகிறது.

இப்படி வீட்டில் அன்பு கிடைக்காத அடக்கு முறைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் உள்ளாகிற பிஞ்சு உள்ளங்களின் ஒடுக்கப் பட்ட உணர்வுகளே எதிர் வினைச்செயலூக் கத் தன்மை பெற்று வக்கிரம் பெறுகின்றன. பழகும் சூழலுக்கேற்ப அவை உக்கிரம் பெற்று கூர்மையடைகின்றன.

இப்படிப் பட்ட சூழலுக்கு இரையாகி வளர்ந்து வரும் இன்றைய இளைஞர்களின் ஒரு மாதிரித் தோற்றம் தானோ ஜான் டேவிட் என்று கருத வேண்டியிருக்கிறது.

நாவரசவின் மறைவுக்குக் காரணமான ஜான் டேவிட் மேல் சம்பவத்தைப் படிக்கும் அந்தக் கணத்தில் ஆத்திரமும் வெறுப்பும் ஏற்பட்டாலும்,

தந்தையும் தாயும் மருத்துவர்களாக இன்னா செய்தாருக்கும் இனியவேசெய்ய ஒருவன் உன் வலது கன்னத்திலே அறைந்தால் அவனுக்கு உன் இடது கன்னத்தை காட்டு என்று போதித்த ஏசுவின் மதத்தைச் சார்ந்தவர்கள். அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்த வன் தான் ஜான் டேவிட் . பெற்றோர் களின் கூற்றுப் படி பார்த்தால் ஜான் டேவிட்க்கு ஒட்டுதல் இருந்ததாக தெரிய வில்லை. இதற்கான காரணம் பின்னணி என்ன என்பது மனோவியல் ரீதியில் தனியே ஆராயத் தக்கது.

நாவரசவின் மறைவுக்குக் காரணமான ஜான் டேவிட் மேல் சம்பவத்தைப் படிக்கும் அந்தக் கணத்தில் அளவு கடந்த ஆத்திரமும் வெறுப்பும் ஏற்படும் அதே வேளை இப்படிப் பட்ட ஜான் டேவிட்களை உருவாக்கும் சமூக சூழல் பற்றியும் நாம் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

விளைவு என்ன ஆகும் என்று அறியாமல் முரட்டுத் தனமாய் நடத்திய ஒரு தாக்குதல் நாவரசுவின் மறைவுக்குக் காரணமாய் இருந்திருக்கலாம். நடந்த அந்த சம்பத்துக்காக நாளெல்லாம் அதை நினைத்து நினைத்து வெம்பி வெதும்பி அந்த வேதனைகளிலேயே நாட்களைக் கழிக்க நேரலாம்.

மகனை இழந்த துயரம் துணைவேந்தர் குடும்பத்துக்கு என்றால் மகனால் நேர்ந்த துயரம் மருத்துவர் குடும்பத்திற்கு. இரண்டும் ஒன்றல்ல சமமாய் வைத்து நோக்கத்தக்க தல்ல என்றாலும் துயரம் இரு தரப்பாருக்கும் தான். ஜான் டேவிட்டின் எதிர்காலமும் கேள்விக்குறியே.

இப்படிப்பட்ட சம்பவங்களில் சட்டம் அதன் போக்கில் தன் கடமையைச் செய்து அதற்குரியதண்டனைகளை வழங்கும். எனவே சம்பவ விவரங்களுக்குப் போகாமல் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தும்



படிப்பகம்

www.padippakam.com

இப்படிப்பட்ட சம்பவங்கள் இனி நிகழாமல் தடுக்க என்ன செய்யலாம் என்பதில் அக்கறை செய்வதே பொருத்தமாக இருக்கும்.

எல்லாவற்றுக்கும் காரணம் சமூகச் சூழல் தான் என்றாலும், சமூகத்தின் மீதே பழியைப் போட்டு வாளாயிருக்காமல் உடனடிக் காரணங்களைக் களைவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

1. ராகிங் என்கிற பெயரிலோ அல்லாமலோ தற்போது மாணவர்கள் மத்தியில் நிலவி வரும் வக்கிர வன்முறை நடவடிக்கைகள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதற்கு தயவு தாட்சண்யமற்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. சட்ட வழி முறைகளை மட்டும் கையாண்டு இப்பிரச்சனைகளைத்தீர்த்து விட முடியாது என்பதால் மாணவர்கள் மத்தியில் இது சார்ந்த பண்பாட்டு விழிப்புணர்ச்சியையும் மனித நேயத்தையும் உருவாக்கி வளர்க்கும்வகையில் பயிற்சி முகாம்கள் நடத்த அதற்குரிய செயல் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

3. விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் முழுப் பொறுப்பும்விடுதிக் காப்பாளர்களின் கரங்களில் ஒப்படைக்கப் படுவதால், அதை முறையாக நிறைவேற்றும் வகையில் நடை முறை விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

4. விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள அன்றாடம் இரவு படுக்கைக்குப் போகுமுன்பும், அதிகாலை விழித்தெழுந்த அல்லது காலையுணவுக்குப் பின்னும் பெயரெடுக்கும் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5. தவிர, தற்போது நிலவி வரும் பல்வேறு பழக்கங்களை மூத்தோர், இளையோர் உறவுகள், சாதியஉணர்வுகள் வட்டார உணர்வுகள் இவற்றை உடனடியாகவோ முரட்டுத்தனமாகவோ களைந்து விட முடியாது என்பதால் மாற்றுச் சிந்தனைகள், மாற்று நடிவடிக்கைகள் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக புதிதாக கல்லூரிகளில் விடுதிகளில் சேரும் மாணவர்களை ஏற்கெனவே உள்ள மூத்த மாணவர்கள் ஒருநாளில் ஒன்றுகூடச்செய்து அறிமுக நிகழ்ச்சிகள் நடத்தலாம். பெயர், ஊர், குடும்பம், பொழுது போக்கு, பழக்க வழக்கங்கள் பற்றிக் கேட்டால், பாடல் பேச்சு , நடிப்பு, அபிநயம் , பேலச் செய்தல் முதலான கலைத் திறன்களை வெளிப்படுத்தி கலந்தாடச் செய்தல் முதலான, அவரவர் விருப்பார்ந்த செயல்களில் ஈடுபடச் செய்து மாணவர்கள் மத்தியில் இணக்கத்தை ஏற்படுத்தலாம்.

பத்து மாதம் தாய் வயிற்றில் சுமந்தாலும், கூடவே தந்தையும் மனத்திலே சுமந்து, பெற்ற குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து அதன் முன்னேற்றத்தில் அக்கரை கொண்டு முதுமையில் தங்களுக்கு எதுவும் செய்யா விட்டாலும் பரவாயில்லை அதுகள்நல்ல படியாக வாழ்ந்தால் போதும் என்று விழைகிற பெரு நோக்குக் கொண்ட பெற்ற மனம் பரிதவிக்க இப்படி நேருகின்ற சம்பவங்கள் கொடுமையிலும் கொடுமையானது தான். அதிலும் நாவரசனின் கடைசி நிமிடங்கள் நினைக்கவே நெஞ்சு பதறுகிற கொடுமை கொண்டதுதான். என்றாலும் துயரங்களிலேயே தோய்ந்து போய்விடுவது பிரச்சினையைத் தீர்க்க உதவாது. நடந்துள்ள சம்பவம் மாணவ சமூகத்திற்கு மனித குல நாகரிகத்திற்கும் விடப்பட்டுள்ள சவால். இதை எதிர் கொண்டு இதற்கான தீர்வு காண வேண்டியது மக்கள்மேல் அன்பு வைத்து நேசிக்கிற சமூக அக்கறை கொண்ட கேட்கிற பற்றாளர்கள் ஒவ்வொருவரது கடமையும். ●



படிப்பகம்

www.padippakam.com

# அரசியலில் சொந்தங்கள் (11)

**- இளங்கதிர் -**

காமராசர் முதலமைச்சராக இருந்த போது அந்த நிகழ்ச்சி நடந்தது. தமிழகத்தின் தென்மாவட்டம் ஒன்றில் ஆலை அரசராக இருந்த ஒருவர் ஓர் உயர்நிலைப்பள்ளி நடத்திக் கொண்டிருந்தார். பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி முரட்டுத் தனமும் மூர்க்கமும் புலமைச் செருக்கும் கல்விப் பெருமிதமும் வாய்ந்த ஒருவர் பள்ளிக்கு வெளியே நடந்த ஒரு கூட்டத்தில் ஆலை அரசரின் அடாவடித் தனங்களைப் பற்றி மிகவிரிவாகவும் கவலையில்லாமலும் பேசி விட்டார்.

மறுநாள் பள்ளிக்கூடத்துக்கு உடல் வலிமைமிக்க இருவர் வந்தனர். 'தமிழ் ஐயாவைப் பெரிய ஐயா அழைத்து வரச் சொன்னார்கள்' என்று தலைமை ஆசிரியரிடம் கூறினர். தலைமை யாசிரியருக்கு நிலைமை புரிந்தது. தமிழாசிரியரை நினைத்து இரக்கப்பட்டார். அவரை அனுப்புவதாகக் கூறிவிட்டுத் தமிழாசிரியரை அழைத்துப் பேசினார்.

'இதோ பாருங்கள்! இப்போதேநீங்கள் யாரிடமும் சொல்லாமல் உங்கள் ஊரைப் பார்க்க ஓடிவிடுவது நல்லது. பெரிய ஐயா வீட்டுக்குப்போனால் என்ன நடக்குமோ?"

தமிழாசிரியர் அஞ்சவில்லை. தான் பார்த்துக்கொள்வதாகக் கூறிவிட்டுப் பணியைத் தொடர்ந்தார். வளமனைக்கு செல்லவில்லை. மறுநாள் நான்கு தடியர்கள் வந்து நேராக அவரையே அழைத்தனர். வருவதாகக் கூறி அவர்களை அனுப்பிவிட்டுச் சிந்தித்தார். சூழ்நிலையின் கடுமை புரிந்தது. விவேகமில்லாமல் புலிக்கூண்டில் சிக்கி உதைபடுவதைவிட வேறு ஏதேனும் செய்யலாமே என்று தோன்றியது.

எவரிடமும் சொல்லாமல் புகைவண்டி ஏறினார். சென்னை வந்தார் திருமலைப் பிள்ளை சாலையில் முதலமைச்சரின் கதவுகள் திறந்திருந்தன. அதுவரையில் காமராசரைப்பற்றி அவருக்கு ஒருநல்ல கருத்தில்லை. மாற்றுக் கட்சி கூறியதைப் போல அவரை வெறும் கருப்பட்டித் தலையராகத் தான் கருதினார்.

முதல்வரின் உதவியாளர் வைர வனிடம் தமிழாசிரியர் முதல்வரைப் பார்க்க வேண்டுமென்று கூறினார். 'முதல்வரை இன்று பார்க்க முடியாது. விரைவாக வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்.' என்று வைரவன் கூறினார்.

' ஏன் பார்க்க முடியாது? என் உயிர் ஆபத்தில் இருக்கிறது. இதைவிட அவருக்கு வேறென்ன அவசரம்? நான் அவரைப் பார்த்துவிட்டுத்தான் போவேன்.' தமிழாசிரியர் கத்தினார்.

உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது. 'யார்ரா அவன் கத்தறவன்'

தமிழாசிரியர் உள்ளே சென்று நிகழ்ந்ததை எல்லாம் சொன்னார். முதல்வர் கேட்டது போலவும் தோன்றவில்லை, கேட் காதது போலவும் இல்லை.

'தமிழ் வாத்திதானே நீ! புறநானூ றெல்லாம் சொல்லுவியே! போய்



படிப்பகம்

www.padippakam.com

சாவேன்!' முதல்வர் கடுஞ்சினத்துடன் பேசினார்.

சாவதற்கா இங்கு வந்தேன். நீங்கள் தான் என்னைப்பாதுகாக்க வேண்டும்.'

'போய்யா! உன் வேலையைப் பார்க்கறதை விட்டுவிட்டு அவனைப்பத்தி நீயேன் பேசறே! வேலையைப் பாரய்யா போய்' முதல்வர் சொன்னார். சற்று இடைவெளிவிட்டு 'ஒன் பேரென்ன சொன்னே?' என்றார்.

'இராமனுசம்' தமிழய்யா மங்கிய குரலில் கூறினார். 'போபோ! நீ ஒழுங்கா இருந்தா அவன் என்ன பண்ணப் போறான் போ' என்று கூறிவிட்டு வெளியே கிளம்பிவிட்டார்.

ஆசிரியருக்கு மனம் ஒடிந்துவிட்டது. நாட்டை ஆளும் முதலமைச்சரை நம்பி வந்தது வீணாகி விட்டது. 'இந்தப் புண்ணாக்கு மனிதரிடம் வந்தே இருக்கக் கூடாது' என்று எண்ணினார்.

முரட்டுத்தனமான அவர் இயல்பு அவரை மீண்டும் பள்ளிக்கூடத்திற்கு உந்தியது. 'நாமே அந்தச் செல்வரின் மாளிகைக்குச் சென்று இரண்டில் ஒன்று பார்த்துவிட்டால் என்ன? என்று முடிவு செய்து கொண்டார்.

இரண்டுநாள் கழித்துப்பள்ளிக்கு வந்த அவரைக் கண்டு தலைமை ஆசிரியர் நொந்துகொண்டார். தன் பதவிக்கே இடையூறு வரக்கூடுமென அஞ்சினார். அன்றும் அவரைத்தேடி நான்கு ஆட்கள் வளமனையிலிருந்து வந்தனர். தமிழாசிரியர் அஞ்சாமல் அவர்களுடன் புறப்பட்டார்.

அந்த நேரத்தில் ஓர் ஆள் தலைமையாசிரியரிடம் வந்து 'இங்கு யாருங்க தமிழாசிரியர் இராமானுசம்' என்று கேட்டுக்கொண்டு வந்தார். தலைமை ஆசிரியர் கையைக் காட்டினார். வந்த ஆள் தமிழாசிரியரைப்பார்த்து 'ஐயா! நீங்க தானா? டி.எஸ்.பி. ஐயா வெளியே உங்களுக்காகப் பார்த்துக் கொண்டிருக் கிறார்களே' என்று கூறி அழைத்துப் போனார்.

மாவட்டக்காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தமிழாசிரியரைப் பார்த்துக் காவலர்களுக்கே உரிய முறையில் ஒழுங்குற நின்று வணங்கினார். தமிழாசியருக்கு ஒன்றும் புரியவில்லை. காவல் துறை அதிகாரி கூறினார் 'உங்களுக்கு முழுப்பாதுகாப்புக் கொடுக்கச் சொல்லி முதலமைச்சர் உத்தரவு' என்றார் தமிழாசிரியருக்கு உடல் சிலிர்த்தது. 'மன்னவன் உறங்கினாலும் அவனுடைய ஆணைச்சக்கரம் நாட்டைக் காக்குமென்று இலக்கியம் கூறுவது இதனைத்தானா' வியந்தது அவருடைய உள்ளம்.

காவலர்கள் புடைசூழ நிமிர்ந்த நன்னடையும் திமிர்ந்த செருக்கும் தோன்றப் புலவர் நடந்தார். செல்வர் இல்லம் சென்றனர். செல்வர் விவரம் அறிந்தவுடன் கூறினார். 'காவல்துறை அதிகாரி அவர்களே! இவர் நம் பள்ளியில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைக் குறித்துப் பேசினாராம். அவை குறித்து அவரோடு கலந்தெண்ண வேண்டும் எனத்தான் அவரை அழைத்தேன்' என்று கூறித் தப்பித்துக் கொண்டார்.

இது நடந்த நிகழ்ச்சி. தொடர்புடைய தமிழாசிரியர் இன்றும் காமராசரைக் குறித்துப் பேசுகையில் அவருடைய செங்கோல் மாட்சியைக் குறித்துப் பெருமிதமுற எடுத்துரைக்கிறார்.

இத்தகைய நல்லாட்சி தந்த காமராசரின் சொந்தம் இன்று வயிற்றுக் கஞ்சிக்குப் பிறர் வீட்டுப் பற்றுப்



படிப்பகம்

www.padippakam.com

பாத்திரம் தேய்க்கிறது. நாமோ அவர்க்குப் பிறகு அமைச்சர்களாக வந்தவர்களின் ஆயிரம் கோடிக் கணக்குகளை அன்றாடம் செய்தித்தாளில் படித்துக் கொண்டிருக்கிறோம்.

காமராசர், பெரியார் ஆகிய இருவரும் கூட்டாக இருந்தகாலத்தில் தமிழ் இனம் பெற்ற ஆக்கம் பலப்பல. தமிழர் பலர் மேனிலைக்குச் சென்றனர். பார்ப்பன உயர் அதிகாரிகள் வயிறெரியும் அளவு அவர்கள் வழியாகவே நகர்ந்த கோப்புகளில் பெரியார் வேண்டிக் கொண்டதற்கிணங்கத் தமிழர்களுக்கு ஆதரவாக முடிவுகள் எழுதப்பட்டன. காமராசர் ஆட்சியிலும் குறைகள் உண்டு. எனினும் அரசுச் சொத்துகளை மடைமாற்றம் செய்துவிட்டார் என்றோ அவருடைய பகைவர்களும் கூறமாட்டார்கள்.

காமராசர் காலத்தில் கொண்டு வரப்பட்ட நிலஉச்சவரம்பு பின்னால் சரியாகச் செயல்படுத்தப்பட்டிருந்தால் தமிழகத்தின்பெருநிலக்கிழார்கள் தங்களின் பண்ணை அரசைத் தொடர்ந்திருக்க மாட்டார்கள். கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்ற பாலதண்டாயுதத்தை அவர் விடுவித்து விட்டார் என்று சுதந்திரக் கட்சியும், பிற கட்சிகளும் குமுறின. இராஜாஜி காலத்தில் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களை நள்ளிரவில் வீடுபுகுந்து சூறையாடிச் சிறைக் கூண்டுகளில் அடைத்த காவல்துறை காமராசர் ஆட்சியில் முற்றிலும் மாறுபட இயங்கியது. முதுகுளத்தூர்க் கலவரத்தில் அவர் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாது காவலனாக விளங்கி அஞ்சாமல் நடவடிக்கை எடுத்துத் தேவரின் பகைமையைத் தேடிக் கொண்டார்.

இந்திய ஒருமைப்பாடு, காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம் நேரு குடும்பத்தின் மேலாண்மை இவற்றில் கண்மூடித் தனமான பற்றுக்கொண்ட காமராசர் பின்னாளில் இவை குறித்து வேறு முடிவுகளுக்கு வருவதற்குரிய கால நிலையில் எதிர்பாராமல் இறந்துவிட்டார். அவரால் அரியணைக்குக் கொண்டு வரப்பட்ட இந்திரா காந்தி அவரை இல்லச் சிறையில் இருத்தினார். விடுதலைக்குழைத்த தலைவர் இந்தியாவில் மீண்டும் கொடுங்கோன்மை இருள் பரவுவதைக் காணப்பொறுக்காமல் கண்மூடிவிட்டார்.

'பெல்' நிறுவனத்தில் காலையில் தொழிலாளர்கள் வேகமாக இயங்குவதைப் பார்க்கும்போது அந்தக் கருமவீரனின் நினைவு வரத்தான் செய்கிறது.

காமராசரிடம் குறைகள் உண்டு. ஒரு கண்மூடித்தனமான தேசியப்பற்றில் அதன் உள்வட்டமான மொழி இன உணர்வுகள் அவருடைய உள்ளத்தில் கண்விழிக்காத புதைநிலையிலே இருந்தன. இந்தியாவை, காந்தியை, நேருவை அவர் நேசித்ததில் தமிழ்நாட்டை, தமிழினத்தை தமிழ் மொழியைப் பற்றோடு அணுகவேண்டிய கடமைப்பாடு கரைந்து போய்விட்டது.

கரடுமுரடான பேச்சும், மென்மையில்லாத அணுகுமுறையும் அவருடைய இயல்புகள். ஆனால் அந்த இயல்புகள் யாரையும் காயப்படுத்தவோ பழி வாங்கவோ இல்லை. அவர் பெரிய மாளிகையில் குடியிருந்தார். ஐதராபாத்து வங்கியில் அவர் பெயரில் ஒரு கோடி ரூபாய் இருக்கிறது. தன் சாதிக்காரர்களுக்கு அவர் ஏராளமாகச் செய்துவிட்டார் என்பன போன்ற அடித்தளமற்ற குற்றச்



படிப்பகம்

www.padippakam.com

சாட்டுகள் அவர்மீது சுமத்தப்பட்டன. அவர் இறந்தபின் அவர் ஒரு துறவியாய் வாழ்ந்த நிலை எல்லார்க்கும் முன்பைவிடத் தெளிவாகத் தெரிந்தது. கும்பகோணத்திற்கு வந்தபோது அவரை ஒரு செய்தியாளர் "உங்கள் பேரில் ஒரு கோடி இருக்குதாமே?" என்று கேட்டார். உடனே அவர் 'அதை எதுக்கு யார்பேருக்கு எழுதித் தரணும்னு சொல்றே. இப்பவே எழுதித்தரேன் போய் வாங்கிக்கன்னேன்' என்று தன் தலையைத் தடவிக் கொண்டே சிரித்தார். ஒருகோடி ரூபாயைச் சேர்த்து வங்கியில் போட்டு வைக்கும் மனப்பாங்கு உடைய வராயிருந்திருந்தால் இன்று காமராசரைத் தமிழுலகம் கருதாது.

காமராசரின் உடனிருந்தவர்களில் பலருக்குத் தலைமைப் பதவியில் நாட்டமும், பெருஞ்செல்வம் தேடிக் கொள்ளும் ஆசையும் இருந்தன. அவர்களை அவர் கட்டுப்படுத்த முடியவில்லை.

தான் வாழ்ந்தவரையில் தனக்கு மேடைகளில் பலரும் அணிவித்த கதர்துண்டுகளையெல்லாம் பாலமந்திர் அனாதைக் குழந்தைகளுக்குக் கொடுத்தனுப்பி விடுவார். தன்னோடு சிறையிலிருந்த ஒருவர் நிறுவிய தொண்டு நிறுவனம் என்பதே அதற்குக் காரணம். நாட்டின் அனாதைகள் எல்லாம் காமராசருக்குச் சொந்தம். அரசியலில் அவருக்கு இவர் வாரிசு அவர் வாரிசு என்றெல்லாம் பேசினார்கள். சொந்த வாழ்க்கையில் காமராசருக்கு வாரிசு இல்லை; ஏனென்றால் அவருக்குக் குடும்பம் இல்லை. பொது வாழக்கையில் காமராசருக்கு வாரிசு இல்லை.ஏனென்றால் அவர் போலத் தியாகம் செய்ய யாரும் தயாராக இல்லை.

- இன்னும் வரும்.

## கவிதைக்குத்து

# ஏனிந்த மௌனம்?

*ஏலேய் தமிழா!*
*ஏனிந்த மௌனம்?*
*நாள்தோறும் உன் முகம் சிதைவதை....*
*நீ காணவில்லையா?*
என் செய்வாய் நீ
நாற்காலிக் கட்சிகளின் 'ரசம்'
உன் பார்வையை மறைத்திருக்கும்
உன் வீட்டுப் பொருளை...............
அண்டைவீட்டான் தொட்டுவிட்டால்.......
ஆடிக்குதிக்கும் நீ...............
உன் தாய் நாட்டு வளம்
கொள்ளை போகும் போது
ஏனிந்த மௌனம்?
நீ கும்பகர்ணன் வழித்தோன்றல்
என்பது எனக்குத் தெரியும்
ஆனால் ...............
இராமன் போருக்கு வந்த பின்னும்
ஏனிந்த உறக்கம்?
உன்மௌனத்தை ______
சம்மதம் எனத்தில்லிக்காரன்
வசதியாகப் புரிந்து கொண்டதால் தான்
'காவிரி' முதல் 'நரிமணம்' வரை
ஒருவனும் உன்னை கேட்கவில்லை.
மார்வாடி சேட்டெல்லாம்
உனக்களித்த (போதை) பாக்கைத்தின்று
மதிமயங்கி திரிகிறாய்
கன்னடவெறியன் உன்னை
கடித்த போதும்
பம்பாய் தமிழன் பரிதவித்தபோதும்
ஈழத்து ஓலம் உன் செவியை
ஊனமாக்கிய பிறகும்
ஏலேய் தமிழா?
ஏனிந்த மௌனம்?

- கா. சங்கர்



படிப்பகம்

www.padippakam.com

# சிலை செதுக்கும் பிக்காசு

**– கதிர் நிலவன் –**

**("கல்கி" பட விமர்சனம்)**

பெண்ணியம், பெண் சமத்துவம், பெண் விடுதலை இது போன்ற சொற்கள் இயக்குனர் கே. பாலசந்தருக்கு பழகிப் போன ஒன்று. இச்சொற்களை அவர் வெண்திரையில் சித்திரமாக்கும் போது அது உயிர் பெறுகிறதோ இல்லையோ, முதலில் சர்ச்சைகள் உயிர் பெற்று விடும். முந்தைய திரைப் படங்களின் வரிசையில் 'கல்கி' திரைப்படமும் வருவதால் இது விளம்பர உத்திக்கான சர்ச்சை' என்றே அவரது 'கல்கி' ஏட்டின் பேட்டி அம்பலப்படுத்துகிறது. திட்டமிட்ட சர்ச்சையோ, அல்லது திட்டமிடாத சர்ச்சையோ எதுவாயினம் விமர்சிப்பதும், செழுமைப்படுத்துவதும் தானே கலை இலக்கியவாதிகளின் கடமையாக இருக்கமுடியும். அந்த வகையில் இப்படத்தை பார்ப்போம் !



ஆணாதிக்க சமூகத்தின் ஒட்டு மொத்த உருவானவன் தொழிலதிபர் பிரகாஷ் (பிரகாஷ்ராஜ்) இவனுக்கு மூன்று மனைவிகள். முதல்மனைவி செல்லம்மா (கீதா) நல்ல இசைப்பாடகி. அவள் வயிற்றின் கருவில் மழலை இராகம் இல்லாததால் 'மலடி' என்ற பட்டத்தோடு விவாகரத்து பெறுகிறாள். இரண்டாம் மனைவி கற்பகம் (ரேணுகா) 'திருமதி'யாய் வாழ்ந்தாலும் ஒரு குழந்தையை 'வெகுமதி'யாய் தந்ததாலே அவனுடன் நீடித்து வாழ்பவள்! மூன்றாம் மனைவி கல்கி (சுருதி) 21-ம் நூற்றாண்டின் புதுமைப்பெண் பெயருக்கேற்றபடி அவதாரமெடுத்து அவரது ஆணவ அதிகாரத்தை அழிப்பவள் மட்டுமல்ல; அவன்மூலம் கரு உண்டாகி முதல் மனைவிக்கு குழந்தை தானம் செய்து ஒருகுட்டிப்புரட்சியே நடத்து கிறாள். இவர்களுக் கிடையில் கல்கியை நேசிக்'கும் காதலன் பரஞ்சோதி (ரகுமான்) அவ்வப்போது 'டூயட்' பாடி அவளை மணம் புரிவதோடு கதையும் முடிவடைகிறது.

கல்கி ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்தது சரியா? தவறா? என்று கேள்வி எழுப்பும் முன் அவளது பாத்திரப் படைப்பே முரண்பாடுகளின் மொத்த உருவமாய் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒருபுறம் கல்கி படப்பிடிப்புக் குழுவினரிடம், பொம்பளைன்னா மட்டமானவளா? என்று சீறுவது, திருவள்ளுவர் மனைவி வாசுகியின் பதிவிரதை தன்மையை கேலி பேசுவது, இன்றைய காதலையும், கல்யாணத்தையும் நிராகரிப்பது, பிறந்தநாள் விழா கொண்டாடுவது பூர்சுவாத்தனம் என்று எதிர்ப்பது ஆகிய அனைத்துமே இன்றைய



படிப்பகம்

www.padippakam.com

பழைய மரபுகளின் மதிப்பீடுகளை எதிர்க்கும் குமுறல்களாக வெளிப்படுத்துகின்றன. மறுபுறம் பல்பொருள் அங்காடியில், தன் கடமையைச் செய்யாத வாயிற்காவலனிடம் நீ சேலை வாங்கி கட்டிக்கோ? என்பதும், கேளிக்கை விருந்துகளில் கூத்தடிப்பதும், நான் புதுமைப்பெண்ணல்ல; போக்கிரிப் பொண்ணு என்று தன்னை தாழ்த்தி கொள்வதும், தன்னை காதலித்தவனையே மணப்பது என்பதெல்லாம் சராசரி மனோபாவமுள்ள பெண்களின் உணர்வு நிலையை பிரதிபலிக்கின்றன.

கல்கியே இப்படியென்றால் செல்லம்மா பாத்திரத்தை கேட்க் வேண்டாம்! இசையைக் குருதியாக கொண்டவளை அதிலாவது உறுதியாக காட்டவேண்டாமா? மனைவி என்பவள் சமைப்பதற்கு மட்டுமென்றால், அதை செய்வதற்கு வேலைக்காரி மட்டும் போதுமென தனது கணவனிடம் நெத்தியடியாய் பேசுபவள், அவன் 'மலடி' என்று திட்டும்போது மட்டும் மனதிற்குள் அழுவானேன்? மனுஷி என்பவள் வெறும் குழந்தை பெறும் எந்திரம் தானா? என்ற உண்மைக் கேள்வியை கேட்கவிடாமல் திட்டமிட்டே இயக்குனர் தடுத்து விடுகிறார். அவ்வாறு கேட்கப்பட்டிருந்தால் செல்லம்மாவை பிடித்தாட்டும் குழந்தைப்பித்து கல்கியை தொற்றி இருக்காது அல்லவா?

கல்கியின் ஆசைகள் விபரீத முடிவு என்றாலும், அதற்காக கொடுமைக்காரனின் கருவை சுமப்பது முட்டாள்தனம் என்றால், அதைவிட நான் செய்தது சரின்னு சொல்ல வரலை! ஆனாலும் அது தப்பில்லை என்று கூறுவது ஒரு மனநோயாளியின் சுத்த பிதற்றலாகவே உள்ளது.

கல்கியை விட அவளின் முரண்பாடுகளை தெரிந்தே ஏற்றுக் கொள்ளும் காதலன் தானே உண்மையான புரட்சிவாதியாக தென்படுகிறான். பாலச்சந்தர் ஒரு பேட்டியில் அதையும் புரட்சி என்கிறார். இதையும் புரட்சி என்கிறார். இவற்றுக் கெல்லாம் அடிப்படைக் காரணம், பழைய சமூக மரபுகளின் மதிப்பீடுகளை புதிய சமூகத்தின் மதிப்பீடுகள் உடைத்து கொண்டு அது பரிணாமமாக வளர்ச்சி பெற்று வருவதை இவர் முழு வளர்ச்சியென அதைக் காண்பது தவறான ஒன்றாகும். இது மேற்கத்திய கலாச்சாரத்திற்கே இட்டுச் செல்லும்.

இப்படத்தில் கல்கி தனக்குத் தானே செதுக்கி கொண்டு முழு பரிணாமம் பெற்றுவருவதாக ஒரு சிலை காட்டப்படுகிறது. கல்கி கையில் இருப்பது பாலச்சந்தருக்கு வேண்டுமானால் உளியாக காட்சியளிக்கலாம். அது தன்னைத் தானே சிதைத்துக் கொள்ள பயன்படுத்தப் பட்ட மண்வெட்டியாகும். ஆம்! ஒரு போதும் மண்வெட்டிகள் சிலைகளை செதுக்குவதில்லை! மொத்தத்தில் கல்கி சீறி வரும் புயலுமல்ல ; முயல்களை ஓட்டத்தில் தோற்கடிக்கும் சிறுத்தயுமல்ல. ●

## சென்னை தோழர் கலியபெருமாள் மறைவு

தகேபொகவின் குரோம்பேட்டை பகுதி தோழர். செ. கலியபெருமாள் 5.12.96 அன்று காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தோழருக்கு வயது 64.

தோழரின் மறைவுக்கு நமது இரங்கலைத் தெரிவித்துக் கொள் கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழகமும் தாழ்த்தப்பட்டோரும்

**– சிலதகவல்கள் –**

***1806:*** அப்போதைய, திருவாங்கூர் மன்னராட்சிக்கு உட்பட்டிருந்த குமரி மாவட்டத்தில், கிறித்துவ ஃப்ராடஸ்டன்ட் சபையால் கீழ்ச்சாதிப் பிள்ளைகளுக்கு என ஒரு துவக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

***1850:*** கீழ்ச்சாதிகளின் முன்னேற்றத்தைப் பொறுக்காத, மேல் சாதிக்காரர்களின் நடவடிக்கைகளைத் தடுக்க 1845 ம் ஆண்டு லெக்ஸ் லோசி என்பவரால் கொண்டு வரப்பட்ட வரைவுச் சட்டம், உயர் சாதிக்காரார்களின் கோபத்தையும், கிறித்துவ சமயப் பாதிரியார்களின் தீவிரத்தையும் சமாளிக்கும் வகையில் ஒரு சமாதான ஏற்பாடாக 'சாதி ஏலாமை ஒழிப்புச் சட்டம்' (Cast e Disabilities Remoral Act) என்னும் சட்டம் கொண்டு வரப்பட்டது.

***1851:*** கிழக்கிந்தியக் குழும ஆட்சியின் சென்னை ஆளுநராக இருந்த எல்ஃபின்ஸ்டன் ஆட்சிக் காலத்தில் 1841-ம் ஆண்டு துவங்கப்பெற்ற ' சென்னை உயர்நிலைப் பள்ளியில், 10 ஆண்டுகள் கழித்தே, முதன் முதலில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட் டனர்.

***1864:*** சென்னைக்கு வருகை தந்த, வங்க பிரம்ம சமாஜத்தின் செயலர் கேசப் பந்திரசென் சாதிக் கொடுமைகளை எதிர்க்க சீர்திருத்தங்களை மேற்கொள்ளக் கோரி அறைகூவல் விடுக்க, அதனால் ஈர்க்கப் பட்ட சென்னை பல்கலைக்கழக சட்டத்துறைசார்ந்த மேல் சாதி மாணவர் இருவர் சென்னையில் அதற்காக அமைப்பு ஒன்றை நிறுவினர். 'வேத சமாஜம்'

***1890:*** அயோத்தி தாசப் பண்டிதரின் (1845 - 1914) முன் முயற்சியில் 'திராவிட மகாஜன சபை' தோற்றுவிக்கப்பட்டது. இதன் முதல் மாநாடு 1.12.1891 ல் நீலகிரியில் நடைபெற்றது. தாழ்த்தப்பட்டோர் இழிவை நீக்கவும், சமத்துவ அடிப்படையில் உரிமைகள்கோரவுமான 10தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவற்றை அயோத்தி தாசப் பண்டிதர் தாம் நடத்தி வந்த 'தமிழன்' என்கிற வார ஏட்டில் வெளியிட்டார். (பறையன்' என அழைப்பதை குற்றமாக்குதல், தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்திற்கு தனிப்பள்ளிகள், - அரைக்கட்டணக் கல்விச் சலுகை, - வேலை வாய்ப்புக்களில் தடையின்மை, பொதுக் கிணறு, குளங்களிலிருந்து நீர் எடுக்கும் உரிமை முதலான பல்வேறு உரிமைத் தீர்மானங்கள் )

***1893:*** சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் பழங்குடி மக்களின் மாநாடு இரட்டை மலை சீனுவாசன் (1860-1945) முயற்சியில் கூட்டப் படுகிறது. இந்தியாவில் இதுவே பழங்குடி மக்களின் முதல் மாநாடு எனப் படுகிறது.

***1930:*** இலண்டன் வட்டமேசை



படிப்பகம்

www.padippakam.com

மாநாட்டில் இந்திய பழங்குடிமக்களின் சார்பில் இரட்டை மலை சீனுவாசன் கலந்து கொள்கிறார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனி ஒதுக்கீடு வழங்கு வதற்கான வித்து ஊன்றப்படுகிறது.

***1931:*** சமூகத்தில் மிகவும் பின்னடைந்த சாதிகளை அட்டவணை சாதியினர் (Scheduled Caste) என வரையறை செய்து அரசு அறிவிக்கிறது.

***1932:*** காங்கிரசு கட்சியின் முன் முயற்சியில் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்புச் சங்கம் நவம்பர் 22ல் துவங்கப் பட்டது. கோயில் நுழைவு உரிமைக் கோருவது முக்கிய கோரிக்கையாயிருந்தது. காங்கிரசிலிருந்த தாழ்த்தப்பட்டோர் அல்லாதார் பலர் ஆதரவு தந்தனர்.

***1938:*** சுதந்திர இந்தியாவில் தீண்டாமை ஒழிப்புச்சட்டங்களுக்கு முன்னோடியாக விளங்கிய 'சென்னை சட்டம் 1938' கொண்டுவரப்பட்டது.

***1950:*** 'இந்தியக் குடியரசின்' அரசமைப்புச்சட்டம் பிறப்பிக்கப்படுகிறது. அரசமைப்புச்சட்டத்தின் மூன்றாம் பகுதி பிரிவு 17ல் தீண்டாமை ஒழிப்புக்கு உறுதி செய்யப்படுகிறது.

' தீண்டாமை ஒழிக்கப்படுகிறது. மற்றும் அதை எந்த முறையாலும் பயிலுவது தடையுறுத்தப்படுகிறது. தீண்டாமை யினின்றும் எழும் தகுதி யின்மை எதனையும் செல்லுறுத்துவது சட்டத்திற்கிணங்க தண்டிக்கத்தக்க ஒரு குற்றச் செயல் ஆகும் ' என இச்சட்டப்பிரிவு கூறுகிறது.

***1955:*** அரசமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட உரிமைகளை உத்திரவாதம் செய்யும் வகையில் 'தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் 1955' கொண்டுவரப்படுகிறது.

***1965:*** மேற்குறித்த சட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல் குறித்து ஆராய திரு. இளைய பெருமாள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

***1976:*** 1955ம் ஆண்டுச்சட்டத்தில் உள்ள குறைகளை நீக்கி அவற்றை சரிசெய்யும் வகையில் 'குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம். 1976,' (Protection of civilRights Act) கொண்டு வரப்பட்டது.

***1989:*** தாழ்த்தப்பட்டோர் மற்றும், பழங்குடியினர் மீதான வன்முறைத் தடுப்புச்சட்டம் (Sheduled caste and Scheduled Tribes(Prevention of Atrocilies) Act) 1989 என்னும் சட்டம் கொண்டுவரப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன் காக்க இதுவரை கொண்டு வரப்பட்டசட்டங்களில் இதுவே மிகவும் கடுமையான பிரிவுகளைக் கொண்டது.

***1991:*** அம்பேத்கர் நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அதையொட்டி அம்பேத்கரின் படைப்புக்கள், பிறபகுதி தாழ்த்தப்பட்டோர் உரிமைப் போராட்ட வரலாறுகள், தகவல்கள் பற்றிய நூல்கள் ஏராளமாக வெளிவருகின்றன. தேங்கிக் கிடந்த தமிழக தாழ்த்தப்பட்ட மக்களை இவை உசுப்பி விழிப்படையச் செய்கின்றன. ஏற் கெனவே தாழ்த்தப்பட்டமக்கள் மத்தியில் பரவியிருந்த கல்வியறிவும், படித்த இளைஞர்களின் எழுச்சியும், தாழ்த்தப்பட்டோர் உணர்வுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

விடுதலைக்கும் புத்துயிர் ஊட்டுகின்றன. 'தலித்' எனும் சொல், அரசியல் சமூக, பண்பாட்டுத்தளங் களில், மக்கள் தொடர்பு சாதனங்களில் செல்வாக்கு பெற்று பவனிவரத் துவங்கு கிறது.

**தாழ்த்தப்பட்டோர் நல நோக்கில் நடத்தப்பட்ட இதழ்கள் :**

1907ல் அயோத்தி தாசப் பண்டிதர் 'தமிழன்' என்ற இதழை நடத்தினார். முதலில் இதற்கு 'ஒரு பைசா தமிழன்' என்று பெயரிட் டிருந்தா்.

1890க்களில் இரட்டை மலை சீனுவாசன் 'பறையன்' என்கிற ஒரு இதழை ஏழு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தியிருக்கிறார்.

1869ல் காயோதயம்

1871ல் பஞ்சமன்

1885ல் திராவிட மித்திரன்

முதலான இதழ்களும் தாழ்த்தப்பட் டோரால் தொடங்கி நடத்தப் பெற்றுள்ளன.

தற்போது சென்னையில் சாமுவேல் பறையர் என்பார் 'பறையர் குரல்' என்கிற ஒரு இதழை நடத்தி வருகிறர்.

இதுவன்றி, தற்போது தலித், தாழ்த்தப்பட்டோர் நலன் காக்க, உரிமைகளுக்கு என்று பலவேறு இதழ்கள் தனிப்பட்ட தாழ்த்தப்பட்டோர் அமைப்பு சார்ந்தும், பல தன்னார்வக் குழுக்கள் சார்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ●

தொகுப்பு: இராசோ

## வெரிதாஸ் வானொலியின் வேண்டுகோள்!

ஈழத்தமிழர் விடயத்தில் வேரித்தாஸ் தமிழ்ப்பணிக்கு ஆதரவுக் கடிதம் எழுதியதுபோல -

"மாட்சிமை பொருந்திய ஐக்கிய நாடுகள் அவை பொதுச் செயலர் அவர்களே, இலங்கையில் நடைபெறும் இனஅழிப்பு யுத்தத்தினை உடனே தடுத்து நிறுத்த ஆவன செய்யும்படியும்,

ஐ.நா. மேற்பார்வையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த முயற்சிகள் செய்யும்படியும்,

ஈழத்தமிழ்மக்களின் தேசிய இனத் தனித்தன்மையை அங்கீகரிக்கும் படியும் வேண்டுகிறோம்," - என அஞ்சல் அட்டையிலோ, தபால் தாளிலோ எழுதி, எமது சென்னை முகவரிக்கோ, பிலிப்பைன்ஸ் முகவரிக்கோ அனுப்பும் படி வேண்டுகிறோம். இவற்றை நாங்கள் மொழி பெயர்ப்பு இணைப்புடன் ஐ.நா. பொதுச்செயலருக்கு அனுப்பி வைப்போம்.

உங்கள் நண்பர்கள், ஊர் மக்கள் யாவரையும் எழுதும்படித் தூண்டுங்கள்.

தமிழ் வாழ்க!

தமிழ் மக்கள் வாழ்க!!

- தமிழ்ப்பணி -



படிப்பகம்

www.padippakam.com

# புலிகள் பயங்கரவாதிகளா ?

## அமெரிக்க நிபுணர் விளக்கம்

உலகத் தமிழர் இயக்க பொறுப்பாளர் தோழர். மாணிக்க வாசகம் சுரேஷ் கனடா அரசினால் கைது செய்யப்பட்டு கடந்த சில மாதங்களாக சிறையில் உள்ளார். அவர் பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர். இந்த அமைப்பு பயங்கரவாத நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகிறது என்பது தான் சுரேஷ் மீதுள்ள குற்றச்சாட்டு.



இவ்வழக்கில் நீதிமன்றத்தில் பயங்கர வாதம் என்றால் என்ன? என்பது பற்றி விவாதிக்கப்பட்டது. இப்பிரச்சினை பற்றி சர்வதேச சட்ட நிபுணர் அமெரிக்கா வின் இல்லினாய்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பாயில் சாட்சியத்தை கனடா நாட்டு நீதிமன்றம் விசாரித்தது.

விடுதலைப் புலிகளை மட்டுமின்றி எந்த தேசிய இனப் போராளி அமைப்பையும் பயங்கரவாதி என்று பட்டம் சூட்டுவதே இந்திய அரசின் வழக்கமாக உள்ளது. எனவே சுரேஷ் வழக்கில் பேரா. பிரான்சிஸ் பாயில் பயங்கரவாதம் என்றால் என்ன என்பது பற்றி விளக்குவதை அறிவது நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

அவரது சாட்சியத்தின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது. 'உலகத் தமிழர் 15-7-96, 15-8-96,1-9-96 இதழ்களில் வெளியான செய்திகளிலிருந்து இது தொகுக்கப்பட்டது.

சர்வதேச சட்டங்களில் பயங்கரவாதம் என்றால் என்ன என்பது பற்றி தெளிவாக விளக்கப்படவில்லை. ஐ.நா.வின் பல்வேறு பிரகடனங்கள் பயங்கரவாதத்தைக் கண்டிக் கிறது. எனினும் பயங்கரவாதம் பற்றி அது வரையறை செய்யவில்லை. இதற்குக் காரணம் இப்பிரச்சினையில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு நேரத்தில், ஒவ்வொரு விளக்கம் கொடுத்து பல திசைகளிலும் இழுக்கிறது. எல்லா நாடுகளும் ஏற்கும் வரைவிலக்கணத்திற்கு ஐ.நா.வால் வரமுடியவில்லை.

பயங்கரவாதம் என்ற சொல் அந்தந்த நாட்டு அரசின் உள்நாட்டுத் தேவையை ஒட் டியே விளக்கப்படுகிறது. வேறு எந்த சொல்லையும் விட பயங்கரவாதம் என்ற சொல் தான் பல்வேறு அரசாங்கங்களால் தவறாகவும், திரித்தும் பயன்படுத்தப்பட் டுள்ளது. அமெரிக்க அரசும் இதைச் செய்துள்ளது.

அமெரிக்க சட்டங்களில் பயங்கரவாதம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறப்பட் டுள்ளது. "பேராளிகள் அல்லாத அல்லது படையினர் அல்லாத சாதாரண மக்களை அச்சுறுத்தும் நோக்குடன் அவர்கள் மீது செலுத் தப்படும் திட்டமிட்ட வன்முறையே பயங்கரவாதம் எனப்படும் என அது விளக் குகிறது. ஆயினும் அமெரிக்க அரசு இதனை தவறாகப் பயன்படுத்தியது. நிகராகுவா



படிப்பகம்

www.padippakam.com

அரசை எதிர்த்து கலகம் செய்த கான்ட்ரா கலகக்காரர்களை 'விடுதலைப்போராளிகள்' என்று அழைத்து உதவி செய்தது. கான்ட்ரா கலகக்காரர்கள் நிகராகுவா மக்களுக்கு எதிராக பயங்கர வன்முறையில் இறங்கியதை உலகம் அறியும். இவர்களைப் பயங்கரவாதி என்று சொல்லாமல் விடுதலைப் போராளி என ரீகன் அரசு அழைத்து இது இவ்வரசின் தேவையை ஒட்டி கொடுக்கப் பட்ட பெயராகும். நெல்சன் மண்டேலாவையும் அவரது ஆப்பிரிக்க தேசிய காங்கிரசையும் அமெரிக்க அரசு பயங்கரவாதி என்றே அழைத்தது. ஆயினும் ஐ.நா. அதனை ஏற்கவில்லை.



அதேபோல், ஆப்கானிஸ் தானில் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்திய முஜாகிதீன் அமைப்பை சோவியத் அரசு 'பயங்கரவாதி' என பெயர்சூட்டி அதனை ஒடுக்க படை அனுப்பியது. சோவியத் ஒன்றிய அரசும் தன் தேவையை ஒட்டியே பயங்கரவாதி என்ற சொல்லைப் பயன்படுத்தியது.

வன்முறை நடவடிக்கை மட்டுமல்ல, மிகச்சாதாரண செயல்பாடுகள் கூட பயங்கரவாதம் எனப்பட்டது. எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் நிகழ்ந்த ஒரு வழக்கைச் சொல்லலாம். அமெரிக்காவில் இருந்த தென்னாப்பிரிக்க தூதரகச் சுவர்களில் 'இன ஒதுக்கல் என்பது கொடும் பாவச்செயல்' (Apartheid is a bloodysin) என ஒரு பெண்மணி எழுதினார். அதற்காக அவர் பயங்கரவாதி எனக் குற்றம் சாட்டப்பட்டு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டார்.

இவ்வாறு பயங்கரவாதம் என்ற சொல் அரசின் விருப்பத்திற்கேற்ப விளக்கப் பெற்றுள்ளது.

'பயங்கரவாதிகள்' விடுதலைப் போராளிகள் என்ற சொற்களுக்கு வேறுபாடுதான் என்ன?

ஒரு அரசு தன் விருப்பத்திற்கேற்ப ஒருவரை அல்லது ஒரு அமைப்பை பயங்கரவாதி என்று கூறுவது போல், ஒரு அமைப்பு தன்னைத் தானே விடுதலைப் போராளி அமைப்பு என அழைத்துக்கொண்டால் அதனை விடுதலைப் போராளி அமைப்பாக ஏற்றுக் கொள்ள முடியுமா?

எந்த ஒரு குழுவும் 'நாங்கள் ஒரு தேசிய விடுதலை இயக்கம்' என்று மார்தட்டிக் கொள்வதாலேயே அது அவ்வாறு ஆகிவிட முடியாது. ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றின்படி 'நாங்கள் சிறப்புநிலை போராளிகள்' (Privileged Combatants) என்று ஒரு அமைப்பு தன்னைத் தானே சொல்லிக் கொள்வதாலேயே அவ்வாறான உரிமை வந்துவிடாது.

எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் 1970களில் 'சிம்பயோனிய விடுதலைப் படை' ( Symbionise liberation Army ) என்றவொரு குழு இருந்தது. இதில் மத்தியதர மேல் மத்தியதர வெள்ளையர்கள் இருந்தார்கள். இவர்கள் அமெரிக்காவில் காணப்படும் காலானியாதிக்கத்தை, இனவாதத்தை முதலாளியத்தை விரும்ப



படிப்பகம்

www.padippakam.com

வில்லை. சில வங்கிகளை இவர்கள் 'கொள்ளை'யடித்தார்கள் பேட்டி ஹெர்ஸ்ட் என்பவரைக் கடத்தினார்கள்.

ஆயினும் இக்குழு ஒரு தேசிய விடுதலை இயக்கமா? இல்லை.

ஏனெனில் முதலில் **தன்னுரிமைக்கு உரித்தான மக்கள் இருக்கவேண்டும் அவர்களை இந்த இயக்கம் பிரதி நிதித்துவப்படுத்த வேண்டும். அத்துடன் அன்னிய ஆக்கிரமிப்புக்கு எதிராக, இனவாதத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்க வேண்டும். அதுவே தேசிய விடுதலை இயக்கமாக பொருள் கொள்ளப்படும்.**

இன்னொரு கேள்வி முன் வைக்கப்படுகிறது. அமெரிக்காவில் சிகாகோவின் தென்பகுதியில் கடந்த 100 ஆண்டுகளாக ஐரிஷ் மக்கள் வாழ்கிறார்கள் அவர்கள் மொழி, பண்பாடு ஆகியவற்றால் தனித்தன்மை உடைய சமூகத்தினர். இந்த ஐரிஷ்மக்கள் சர்வதேச சட்டங்களின் படி பிரிந்து போகும் உரிமை கோர-தன்னுரிமை கோர் உரிமை படைத்தவர்களா என்றால், இல்லை. ஏனெனில் தென்சிகாகோ இவர்களது வரலாற்றுத் தாயகம் (Historical Homeland) அல்ல அயர்லாந்து தான் அவர்களது வரலாற்றுத் தாயகம்.

சர்வதேச சட்டங்களின்படி ஈழ தமிழர்கள் தன்னுரிமை கோரத் தகுதியுள்ளவர்கள்.

இலங்கைத்தீவில் வரலாற்று வழிப்பட்ட தனித்த தாயகத்தோடும், தனித்த அரசின் கீழும் இவர்கள் வாழ்ந்து வந்தனர். மொழி, சமயம், பண்பாடு ஆகியவற்றால் சிங்களர்களிடமிருந்து வேறு பட்டவர்கள். பிரித்தானிய ஆட்சியின் துப்பாக்கி முனையில் இவர்கள் ஒரே ஆட்சிப் பகுதியில் இணைக்கப்பட்டனர். ஆயினும் பிரித்தானிய ஆட்சியில் வரையப்பட்ட அரசமைப்புச் சட்டம் தமிழர்களுக்கு சில அடிப்படை மனித உரிமைகளை உறுதி செய்தது.

வெள்ளையராட்சி போனபின்பு, 1950-களில் இலங்கை அரசு உருவாக்கிய புதிய அரசமைப்பு சட்டம் தமிழர்களுக்கு இருந்த இந்த பதுகாப்புகளை நீக்கியது. அன்றிலிருந்து தற்போதைய முரண்பாடு உருவானது.

தமிழீழ **விடுதலைப்புலிகளின் அமைப்பு தமிழீழ மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. எனவே, சர்வதேச சட்டங்களின்படி அது ஒரு தேசிய விடுதலை இயக்கம்தான்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேசசட்டங்களுக்கு அமைய ஒரு தேசிய விடுதலை இயக்கம் தான் என்பதை கீழ் வரும் காரணங்களால் உறுதி செய்யலாம்.

1. ஆப்பிரிக்கா தேசிய காங்கிரசைப் போலவே தமிழீழ விடுதலைப் புலிகளும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஜெனிவா மரபுகளையும், ஒப்பந்தங்களையும் ஏற்றுக்கொள்ளும் ஆவணங்களை கையளித்தனர். 1988-ல் இந்நிகழ்ச்சி நடந்தது.

ஜெனிவா மரபுகள், ஒப்பந்தங்கள் கடைபிடிக்கப்படுகிறதா என்பதை மேற்பார்வை செய்யும் செஞ்சிலுவை சங்கத்தின் பாத்திரத்தையே இது காட்டுகிறது. சர்வதேச செஞ்சிலுவை சங்கம் பொதுக் குற்றங்கள் போன்ற நிகழ்வுகளில் தலையிடுவதில்லை.

2. தமிழர் தாயகத்தில் சிங்களர்களை கட்டாயக் குடியேற்றம் செய்தது. இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

அரசு. இந்த வகை காலனியத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் அமைப்பு போராடுகிறது.

3. ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலோடு மனித உரிமை குறித்த ஒப்பந்தத்தில் புலிகள் அமைப்பு கையெழுத்திட்டுள்ளது. சர்வதேச செஞ்சிலுவைசங்கம், ஐ.நா. மனித உரிமைக்குழு ஆகியவை விடுதலைப் புலிகளை சர்வதேச சட்டத்தின் படியுள்ள சிறப்பு நிலை போராளிகளாக அங்கீகரிப்பதையே இது காட்டுகிறது.

4. இலங்கை குடியரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா புலிகளுடன் முறைப்படியான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் (Cessation of Hostilities) கையெழுத்திட்டுள்ளார். புலிகள் அமைப்பின் தலைவரும் கையெழுத்திட்டுள்ளார்.

இதன் மூலம் சர்வதேச சட்டப்படி தமிழீழம் போரில் ஈடுபட்டுள்ள தனித் தேசம் (Belligerent Status) என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளதையும், அதன் சிறப்புநிலை படை புலிகள் என்பதையும் இலங்கை அரசு அங்கீகரித்துள்ளது என்பதே உண்மை நிலை.

5. யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை அரசு பொருளாதாரத் தடைவிதித்தது. இதுவும் தமிழீழம் போரில் ஈடுபட்டுள்ள தனித் தேசம்தான் என்ற அந்தஸ்தை உறுதி செய்கிறது.

இதற்கொருசட்டமுன்னுதாரணத்தைப் பார்க்கலாம். அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் மூண்டபோது அன்றைய அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் அப்போரில் ஈடுபட்டோரை முதலில் கலக்காரர்கள் (Rebels) என்றே அழைத்தார். சில நாட்களில் அம்மாநிலத்தின் மீது பொருளாதாரததடை (Economic Blockade)விதித்தார். லிங்கனின் இச்செய்கை முறை சார்ந்த போர் நடவடிக்கை என்றும் இதுவே அக்குறிப்பிட்ட பகுதிக்கு போரில் ஈடுபட்டுள்ள தனித்தேசம் என்ற அந்தஸ்தை வழங்குகிறது எனறும் நீதிமன்றங்கள் விளக்கம் கூறின.

எனவே ஒரு பகுதி மக்கள் தாயகத்தின் மீது ஒரு அரசு பொருளாதாரத்தடை விதித்தால் அத்தாயகம் போரிடும் தேசம் என்று ஏற்றுக் கொண்டதாகத் தான் பொருள். இனி அப்போராளிகள் விடுதலைப் படையினரே தவிர பொதுவான குற்றவாளிகள் அல்லர்.

6. நார்வே அரசு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமரசம் செய்து வைக்க முன் வந்தது. நார்வே அரசு பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கும், இஸ்ரேல் அரசுக்கும் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தியது. அதுவே ஆஸ்லோ ஒப்பந்ததில் முடிந்தது. இலங்கைப் பிரச்சினையில் நார்வே முன் வந்துள்ளதும் அத்தகையதே.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் போலவே தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு நிழல் அரசாங்கம் (Defact o Government) என நார்வே அரசு அங்கீகரித்துள்ளதை இது காட்டுகிறது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்தத்தை மேற்பார்வையிட கனடா அரசும் ஒப்புக் கொண்டது.

இதுவும் போரிடும் தனித்தேசம் என்று தமிழீழத்தையும் நிழல் அரசு என புலிகள் அமைப்பையும் அங்கீகரித்தாகவே பொருள்.

தன்னுரிமைக்குப் போராடும் ஒரு தேசம் ஆயுதத்தைப் பயன்படுத்துவதை ஐ.நா.மரபு சாசனம் அங்கீகரிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

யுகாஸ்லாவியாவிலிருந்து பிரிந்து குரேஷியா தனிநாடாக விரும்பியபோது செர்பியா படைபலத்தோடு ஆக்கிரமிப்பு செய்தது. அந்நிலையில் குரோஷியா ஆயுத மோதலில் ஈடுபட்டதை ஐ.நா. ஏற்றது.

**அதே போன்று தமிழீழம் என்ற தனது ஆட்சிப்பரப்பை வேற்றினம், அதாவது சிங்கள இனம் ஆயுதபலத்தால் ஆக்கிரமிக்க முயலும்போது தமது எல்லையைக் காத்துக் கொள்ள ஈழத்தமிழர்கள் ஆயுதம் ஏந்துவது ஐ.நா. மரபு சாசனப்படி சரியே.**

**இந்த தற்காப்பு வன்முறை பயங்கரவாதம் ஆகாது.**

இந்த தற்காப்புப் போருக்காக விடுதலைப்புலிகள் வேற்று நாட்டு மக்களிடம் உதவி கோருவதும், அம்மக்கள் உதவி வழங்குவதும் சட்ட வரம்புக்குட்பட்ட நடவடிக்கைகளே தவிர சட்டமீறல் குற்றம் ஆகாது. ●

**– வடமலை.**

---

## தீண்டாமை ஒழிப்பு – தமிழர் ஒற்றுமை மாநாடு

### வரைவுத் தீர்மானத்தின் மீதான விளக்க – விவாதக்கூட்டங்கள்

*அரக்கோணம் :*
*30-11-96. மாலை 6.00 மணி*
*தலைமை : தோழர் ப.எஸ்வுந்தராவ்*
*விளக்கவுரை ;*
தோழர் இராசேந்திரசோழன்

*காஞ்சிபுரம் :*
*1-12-96. மாலை 6.00 மணி*
*தலைமை : தோழர் ச. யோகநாதன்.*
*விளக்கவுரை:*
தோழர். இராசேந்திரசோழன்

*திண்டிவனம் :*
*2-12-96.மாலை 6.00 மணி*
*தலைமை :தோழர் இரா. மணி*
*விளக்கவுரை :*
தோழர் இராசேந்திரசோழன்

*செங்கிப்பட்டி :*
*4-12-96. முற்பகல் 11.00 மணி*
*தலைமை : தோழர். கு. சுப்பிரமணி*
*விளக்கவுரை :*
தோழர் இராசேந்திரசோழன்

*திருக்காட்டுப்பள்ளி :*
*5-12-96 11.00 மணி*
*தலைமை : தோழர். சக்தி*
*விளக்கவுரை :*
தோழர் இராசேந்திரசோழன்.

*சத்தியமங்கலம் :*
*14-12-96 முற்பகல் 10.00மணி*
*தலைமை : தோழர். குமார ரவிக்குமார்*
*விளக்கவுரை :*
தோழர் இராசேந்திரசோழன்.

*கோபிசெட்டிபாளையம் : 14-12-96*
*மாலை 5.00 மணி*
*தலைமை : தோழர். குமணன்*
*விளக்கவுரை :*
தோழர் இராசேந்திரசோழன்.

*ஈரோடு :15-12-96 மாலை 5.00 மணி*
*தலைமை : தோழர். குறிஞ்சி*
*விளக்கவுரை :*
தோழர் இராசேந்திரசோழன்.



படிப்பகம்

www.padippakam.com

# தலித் பண்பாடு - 2

- இராசேந்திரசோழன்

தலித் பண்பாடு குறித்து, அதாவது தாழ்த்தப்பட்டமக்களது பண்பாடு குறித்து பேசுவதன் நோக்கம் தாழ்த்தப்பட்டமக்களது விடுதலையே என்பது கண்கூடு.

பார்ப்பனிய ஆதிக்கப் பண்பாட்டை எதிர்க்காமல், தாழ்த்தப் பட்ட மக்கள் விடுதலை அடைய முடியாது என்பதும் தெளிவு.

இதில் நம்முன் உள்ள வினா, பார்ப்பனிய ஆதிக்கப் பண்பாட்டை நாம் எவ்வாறு எதிர்க்கப் போகிறோம் என்பது தான்.



தற்போது நிலவும் அனைத்து சாதி, மற்றும் உட்சாதிகளின் அனைத்துப் பண்பாட்டு நடவடிக்கைகளுக்குமான ஊற்றுக்கண் பார்ப்பனியம். அதாவது பார்ப்பனியம் தோற்றுவித்த வருணக் கோட்பாட்டையும், அதை யொட்டி இறுக்கமடைந்த சாதியத்தையும் சார்ந்தே இன்று அனைத்து சாதிகளுக்குமான பண்பாடும் நிலவி வருகிறது.

இதில் ஏதாவது ஒரு சாதியின் பண்பாட்டை முன்னிறுத்துவதன் மூலம் பார்ப்பனியத்தை எதிர்க்க முடியுமா..... நிச்சயம் முடியாது.

ஏனென்னில், முன்னிறுத்தப்படும் எந்த ஒரு சாதிப்பண்பாடும் இறுதியாக பார்த்தால் பார்பானியத்தால் உருவாக்கப் பட்டதே; எனவே, பார்ப்பனியத்தால் உருவாக்கப்பட்ட அதே பண்பாட்டை ஒழுகியோ முன்னிறுத்தியோ பார்ப்பனியத்தை எதிர்க்க முடியாது. மாறாக இப்பார்ப்பனியத்துக்கு உதவி செய்வதாகவே அதற்கு உறுதுணையாகஅமைவதாகவே முடியுமே யல்லாது மாற்றாக முடியாது.

இதே நோக்கில் தான் பாாப்பனியத் திற்கு எதிராக தாழ்த்தப்பட்ட வர்களிடையே தற்போது நிலவும் பண்பாட்டையும் முன்னிறுத்த முடியாது.

எடுத்துக்காட்டாக, பறையடித்தல், செத்தமாடு தூக்குதல் சவக்குழி தோண்டுதல், பிணத்தை எரித்தல், அசுத்தங்களை அப்புறப்படுத்தல் போன்ற, பார்ப்பனியத்தால் 'தீட்டு' என்று விலக்கி வைக்கப்பட்ட தொழில்களைச் செய்யவும், அதனாலேயே தீண்டத்தகாதவர்கள் எனவும் ஆக்கப்பட்டு, நூற்றாண்டுகளாக ஊரைவிட்டு தனியே ஒதுக்கிவைத்து, அதனாலேயே ஒட்டுமொத்த சமூக நாகரிக வளர்ச்சியினால் உள்வாங்கப்படாமலும், அதற்கான வாய்ப்பு வழங்கப்படாமலும் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி கடைநிலையில் வாழ்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தற்போது நிலவும் பண்பாட்டிற்கு அடிப்படைக் காரணம் பார்ப்பியம்.

பார்ப்பனியத்தால் உருவாக்கப்பட்ட இப்பண்பாட்டை வைத்து பார்ப்பனியத்தை எவ்வாறு எதிர்க்க முடியும்...?

எனவே, தலித் பண்பாடு பற்றி பேசுபவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தற்போது நிலவும் பண்பாட்டை அப்படியே கடைபிடித்து, அதைத் தக்க



படிப்பகம்

www.padippakam.com

வைத்து அதன் மூலம் பார்ப்பனியப் பண்பாட்டை எதிர்க்க வேண்டும் எதிர்க்கமுடியும், என்று சொல்ல மாட்டார்கள் என்று நாம் நிச்சயம் நம்பலாம்.

ஆகவே, தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் தற்போது நிலவும் பண்பாட்டையல்ல, மாறாக அவர்கள் மத்தியில் உருவாக்கி வளர்க்க இருக்கிற தோற்றம் கொள்ளச் செய்கிற ஒரு புதிய பண்பாட்டை வைத்தே பார்ப்பனியப் பண்பாட்டை எதிர்க்க வேண்டும், எதிர்க்கமுடியும் என்று சொல்வதாகவே கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படி உருவாக்கப் போகும் பண்பாடாக இவர்கள் எதை முன்னிறுத்து கிறார்கள்.... திரு. ராஜ் கௌதமன் எழுதியுள்ள தலித் பண்பாடு என்கிற நூலில் இடம் பெற்றுள்ள தலித் பண்பாடு குறித்து, தலித் இயக்கப் பொறுப்பாளர்கள் தங்களுக்குள் நடத்திக் கொண்ட ஒரு கலந்துரையாடலில் தெரிவித்த கருத்துக்களை ஆதாரமாகக் கொள்வதானால் ....



சாராயம் குடிப்பது, அடிதடி, வெட்டுகுத்து, உதை என்பதை ஊக்கப்படுத்துவது, ரௌடியிசம், கொள்ளையடித்தல் ஆகியவைகளை ஊக்கப்படுத்துவது, அதோடு 'திருட்டு' என்பது உடைமை வர்க்கத்தை உடைப்பது என்பதனால் அதையும் ஊக்கப்படுத்தலாம் என்பது வரை, தலித் பண்பாடு குறித்து இவர்கள் அக்கலந்துரையாடலில் பேசியிருக் கிறார்கள்..... அதாவது கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இப்படிப்பட்ட செயல்பாடுகளை முன்னிறுத்தி, பார்ப்பனிய ஆதிக்கப் பண்பாட்டை எதிர்க்க வேண்டும் என்பதே இவர்களது நிலைப்பாடு என்பதாகக் கொள்ளலாம்.

அடி, உதை, வெட்டு,குத்து என்பதெல்லாம் கூடவே கூடாது என்பதோ, திருட்டு என்பதெல்லாம் கனவிலும் நினைத்துப்பார்க்கக் கூடாத இழி சொல் என்று கொள்வதோ நமது நோக்கமல்ல. அல்லது பொத்தாம் பொதுவான ஒழுக்கவியல் கோட்பாட்டின் அடிப்படையிலும் இதை நோக்கவில்லை.

ஆனால் அடி,உதை, வெட்டு, குத்து, திருட்டு என்பதெல்லாம் அருவமாக வைத்துப்பேசி முடிவுக்கு வருகிற கருத்தாக்கங்கள் அல்ல. மாறாக இவை பருண்மையான நிலைகளில் வைத்து ஆராய்ந்து அதற்கேற்ப புரிந்து கொள்ளத் தக்கவை.

எடுத்துக்காட்டாக, அடி என்பது யார், யாரை அடிப்பது, எந்தச் சூழலில் அடிப்பது, இவ்வாறே வெட்டுவது என்றால் யாரை வெட்டுவது, எந்தச் சூழலில் வெட்டுவது, இப்படி ஒவ்வொன்றாக எடுத்து ஆராய, மேலே சொல்லப்பட்டதெல்லாம் அருவமாகவோ சார்நிலைத் தன்மையற்றோ புரிந்து கொள்ளத் தக்கதல்ல மாறாக, பருண்மையான சூழலில் சார்நிலைத் தன்மையோடு பொருத்தி புரிந்து கொள்ளத் தக்கது என அறியலாம்.

அதோடு எழுகிற பிரச்சனைகளையெல்லாம் அடி,உதை, வெட்டு, குத்து என்கிற நடவடிக்கைகளின் மூலமேதான் தீர்க்க வேண்டும், தீர்க்க முடியும் என்பதும் கட்டாயம் இல்லை. பேசி, சமரசமாத் தீர்க்க வேண்டிய, தீர்க்கக் கூடிய பிரச்சனைகளும் உண்டு என்பதையும், அது பிரச்சனையின் தன்மையையும், வடிவத்தையும் பொறுத்தது



படிப்பகம்

www.padippakam.com

என்பதையும், இதையும் பருண்மையான சூழல்களே தீர்மானிக்கின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்படி அடி, உதை, வெட்டுகுத்து கருத்தாக்கங்களுக்கு அப்பால் 'அடங்கமறு' அத்துமீறு என்கிற கருத் தாக்கங்களும் முன் வைக்கப்படுகிறது. இப்படி அடங்கமறுத்து, அத்துமீறும் ஒரு கலகப் பண்பாட்டின் ஊடேதான் 'தலித் பண்பாட்டை கட் டியமைக்க முடியும் என்றும் தலித் இயலாளர்கள் சொல்கிறார்கள்.

இதில் நாம் ஆராயத்தக்கது, அடி உதை வெட்டுகுத்து போன்ற சார்நிலைச் சொற்கள் செயல்பாடு கள் போலவே அடங்கமறு, அத்து மீறுகலகம் செய் என்பவைகளும் சார்நிலைத் தன்மையுடயவைகளே. இச்சார் நிலைத் தன்மையல்லாத பொத்தாம் பொதுவான அடங்க மறுத்தலோ, அத்துமீறலோ, கலகம் செய்தலோ எதுவுமில்லை, என்பதும்,



தவிரவும், இப்படி முன்வைக்கப்படும் கருத்தாக்கங்களும் எதுவும் புதியன அல்ல. இவையனைத்தும் ஏற்கனவே பல புரட்சிகர அமைப்புக்களோ, போராளிக்குழுக்களோ, அல்லது இடது சாரி இயக்கங்களோ முன்வைத்தவை தான் என்பதும் இவை களில் எதுவுமே பொத்தாம் பொதுவாக குறிப்பிட்ட கோட்பாட்டினை அடிப்படை யாகக் கொண்டு முன் வைக்கப்பட்டவை அல்ல என்பதும் கவனிக்கத்தக்கது.

எடுத்துக்காட்டாக, சமூகக் கட்ட மைப்பில் மாறுதலை விளைவிக்கமேற் கொள்ளப்பட்டஎந்த ஒருநடவடிக்கையும், அடங்க மறுத்தலையும், அத்து மீறலையும், கலகத்தையுமே வெளிப்படுத்தி வந்துள்ளன.

தமிழக வரலாற்றிலேயே நில வுடைமை மன்னராதிக்கத்தை எதிர்த்த உழவர் கிளர்ச்சிகளோ, வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த விடுதலைப் போராட்டங்களோ, தற்போதைய டெல்லி ஆதிபத்தியத்தை எதிர்த்து நடைபெற்று வரும் பலதரப்பட்ட போராட்டங்களோ, மாதிரியான எந்த ஒரு போராட்டமும், அல்லது ஆதிக்க சக்திகள், நிறுவனங் களுக்கு எதிராக நடைபெறும் எந்த ஒரு எதிர்ப்பு நடவடிக்கைகளும் எல்லாமுமே, அச்சக்திகளின் கட்டுத் திட்டங்களுக்கு அடங்க மறுத்தது தான். அச்சக்திகளால் முன் வைக்கப்பட்ட அத்துக்களை மீறி கலகம் விளைவித்தது தான்.

இப்படியிருக்க, இது ஏதோ தலித் பண்பாடு என்னும் கருத்தாக்கம் புதிதாக முன் வைப்பது போல் காட்டுவது ஒரு மாயை, மயக்கம் அல்லது பொய்த் தோற்றமே யன்றி வேறில்லை.

வேண்டுமானால், இப்படி ஒரு வாதத்தை முன் வைக்கலாம். இப்படி அடங்க மறுத்து, அத்துமீறி கலகத்தை விளைவித்த பல்வேறு இயக்கத்தினரும், வேறு தளங்களில் இதை நிகழ்த்தி யிருக்கிறார்களே தவிர, பண்பாட்டுத் தளத்தில், சாதியக்கட்டமைப்பில் தங்கள் அத்துமீறலை நிகழ்த்தவில்லை. நாங்கள் அதை முன்னிறுத்துகிறோம் என்று சொல்லலாம்.

இதில் ஓரளவு நியாயமும் உண்டு. அரசியல், சமூக, பொருளாதாரத்தளத்தில் இப்படிக் கலகம் விளைவித்தவர்கள் பண்பாட்டுத் தளத்தில் குறிப்பாக சாதியக் கட்டமைப்பில் அதிலும் குறிப்பாகத்



படிப்பகம்

www.padippakam.com

தீண்டாமைக்கொடுமைக்கெதிராக, பொதுவான நோக்கில் அதாவது, ஒட்டு மொத்தமாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்கிற நோக்கில் கலகம் விளைவித்திருக்கிறார்கள்என்ற போதிலும் குறிப்பாக அதை ஒரு பிரச்சனையாக்கி அதற்கு ஒரு சிறப்பு முக்கியத் துவம் கொடுத்து கலகங்களை விளை வித்திருக்கிறார்களா என்பதை கேள்விக் குள்ளாக்க எவருக்கும் உரிமை உண்டு.

என்றபோதிலும், தற்போது இப் பிரச்சனையை எடுப்பவர்கள் தாங்கள் இப்படி முன்வைக்கும் கருத்தாக்கங்களை மேலே சொல்லப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகப் பார்க்க வேண்டும், முன் வைக்க வேண்டுமேயல்லாது, இதற்கு முன் தொடர்ச்சியே இல்லாதது போலவோ தாங்கள்தான் புதிதாக இதை முன்வைப்பது போலவோ தோற்றப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. இப்படிச் செய்வது திட் டமிட்டது, உள்நோக்கமுடையது என சந்தேகிக்கச் செய்வது.

அடங்கமறுத்தல், அத்துமீறல், கலகம் செய்தல், இதையொட்டி வரும் அடி, உதை, வெட்டு குத்து எதுவுமே இடது சாரி இயக்கங்களுக்கோ, அது சார்ந்து முன் வைக்கப்படும் கருத்தாக்கங்களுக்கோ புதியது இல்லை.

எனவே, தலித்பண்பாடு என தனியாக அடையாளப்படுத்திக் கொள்ள இதில் எதுவும் இல்லை.

இது ஒரு புறமிருக்க, இப்படி அடங்க மறு, அத்துமீறு, கலகம் செய் என்கிற கருத்தாக்கங்கள் அல்லது முழக்கங்களை வேறு ஒரு கோணத்திலும் நோக்க வேண்டியிருக்கிறது.

காரணம், இவற்றில் எவற்றையுமே, எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சூழலுக்கும் பொருந்தக்கூடிய முற்றுண்மையாகவும் கருதிக்கொள்ளக் கூடாது. முடியாது.

ஏனெனில், அடங்கமறு என்பது அடங்குவதையும், அத்துமீறு என்பது அத்துக்குள் நிற்பதையும் சேர்த்தே அர்த்தப்படுத்துகிறது.

எவ்வாறெனில், ஆதிக்க சக்திகளுக்கு அடங்கமறுக்கும் ஒருவன் அவ்வாதிக்கத்தை எதிர்க்கும் இயக்கத்திற்கு அடங்குகிறான். ஆதிக்க வரை யரைகளின் அத்துக்களை மீறும் ஒருவன் அவ்வாதிக்கத்தை எதிர்க்கும் இயக்கத்தின் அத்துக்களுக்கு உட்பட் டவனாகிறான்.

இப்படி அடங்காமல், உட்படாமல்,கட் டுப்பாட்டுக்குள் நிற்காமல் ஒரு அமைப் பைக்கட்ட முடியாது. இப்படி ஒரு அமைப்பைக் கட்டாமல் எந்த ஆதிக் கத்தையும் எதிர்க்கமுடியாது.

எனவே, பார்ப்பனியப் பண்பாட்டை எதிர்க்கும் எவரும், குறிப்பாக-தாழ்த்தப்பட் டோர், பார்ப்பனியப் பண்பாட்டிற்கு எதிராக தலித் பண்பாட்டைப் பற்றிப் பேசுவதால் - தலித் பண்பாடு குறித்து பேசுபவர் எவரும் அதைத் தெளிவு படுத்த வேண்டும்.

இதைப்பற்றி பேசாமலோ, அல்லது, மூடிமறைத்தோ பொதுவாக 'அடங்கமறுப்பது', 'அத்துமீறுவது', கலகம் செய்வது' என்று பேசுவது இலக்கற்ற குறியற்ற விரயத்திற்கே இட்டுச் செல்லும்.

காலம் காலமாக ஒடுக்கப்பட்ட, சாதிரீதியில் இழிவு படுத்தி தாழ்நிலையில் வைக்கப்பட்ட சமூகப்பிரிவினரில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் புதிய விழிப்புணர்ச்சியும், எழுச்சியும் ஏற்பட் டிருப்பது முழுக்க முழுக்க வரவேற் கத்தக்கது. ஆதரவு தந்து ஊக்கப்படுத்தி, சமூகவளர்ச்சியில் மிகமிக முக்கிய பங்காற்ற வைப்பது.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் ஆதிக்க சக்திகளும், அதன் அடிவருடிகள் அல்லது அதனால் சுயலாபம் பெறுபவர்களும், இந்த எழுச்சியை திசை திருப்பவும், தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயன்று வருகிறார்கள் என்பதும், கண்கூடு.

இதன்வழி, இவ்விளைஞர்கள் பலரை ஏகாதிபத்திய நலன்காக்கும் சக்திகளும், அதன் உதவித்தொகையில் ஊக்கம் பெற்றுச் செயல்படும் தன்னார்வக் குழுக் களும் தங்கள் பிடிக்குள் வைத்து பராமரித்து வருகின்றன.

இவற்றின் தன்மைகள் குறித்து அடுத்துப் பார்ப்போம். ●

## கூர்க்காலாந்து பிரிவு கூண்டோடு விலகல்

### சி.பி.எம். கட்சியிலிருந்து

டார்ஜிலிங் : டிசம்பர் 14. சி.பி.எம். கட்சியின் கூர்க்காலாந்து பிரிவு கூண்டோடு அக்கட்சியிலிருந்து விலகி தனிக்கட்சி துவங்கியுள்ளது. புரட்சிகர பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) என்பது புதுக்கட்சியின் பெயர். கூர்க்காலாந்து மக்களின் தனிமாநிலக் கோரிக்கையை அடைவதற்காக தாங்கள் தனிப்பிரிந்து வந்ததாக அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர். கட்சியில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து கட்சியின் இளைஞர், அமைப்பைச் சேர்ந்தவர்களும் விலகி வந்துள்ளனர். கட்சிக்கு டி.ஆர்.லாமா என்பவரை அமைப்பாளராகக் கொண்ட மத்தியக்குழு இடைக்கால ஏற்பாடாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தனிக்கட்சி துவங்கிய இக்கட்டத்தில் சி.பி.எம். கட்சியின் மக்களவை உறுப்பினர்ஆர்.பி.ராய், மாநிலங்களவை உறுப்பினர் தவாங்,தாவா,லாமா ஆகிய இருவரும் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.

சி.பி.எம். கட்சியின் மேற்கு வங்கக்குழு இவர்களைக் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் எனக்கூறி 6மாத காலத்திற்கு இடைநீக்கம் செய்து, கூர்க்காலாந்து பகுதி மாநிலக்குழு, உறுப்பினர்கள் 5 பேர் மீதும் நடவடிக்கை துவங்கியுள்ளது.

விநோதம் என்னவென்றால், மேற்கண்ட இரு எம்பிக்களும் புதுக்கட்சியிலும் சேரவில்லை. சி.பி.எம். கட்சிக்கும் விலகல் கடிதம் தரவில்லை. ஏன் என்று பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு "எல்லாம் காரணமாகத்தான் சி.பி.எம். கட்சி எங்கள் மேல் நடவடிக்கை எடுத்து எங்களை விலக்கட்டுமே. நாங்களாக ஏன் விலகல் கடிதம் தரவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

கூர்க்கலாந்து பகுதி சி.பி.எம். தனிப்பிரிந்தது தேசிய இனப் பிரச்சனைகள் குறித்த சி.பி.எம். மின் நிலைக்கு மேலும் ஒரு அடி. தேசிய இன உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது, அதை மதிக்காது, அதற்குரிய தீர்வுகளைச் சொல்லாது இந்தியதேசியம் பேசிவரும் கட்சி, இதே நிலையை மேற்கொண்டால், இன்னும் வேறு தேசியஇனப் பகுதி மக்களும், பிரச்சினை முற்றும்போது மேற்கண்ட வழியை பின்பற்றுவார்கள் என்பது திண்ணம். சி.பி.எம் கட்சியினர் இப்போதாவது நிலைமையை உணர்ந்தால் சரி. ●



படிப்பகம்

www.padippakam.com

( 4-ம் பக்கத் தொடர்ச்சி...)

*தானைத்தலைவர்,*
*தளபதி,*
*பாசறை,*
*மலர்க்கிரீடம்,*
*அலங்கார வளைவு*
*முன்பு வழக்கமாகி*
*இன்று*
*அவ்வெப்பொழுது*
*எழுந்து நிற்கும்*
*உருவக் கட்டமைவுகள்*
*(கட் அவுட்)*

★ *கரிகாற்பெருவளத்தான்*
*காலாவதியாகவில்லை*

★ *இராசராசன்*
*ஆயிரம் ஆண்டுத் தூசியைத்*
*துடைத்துவிட்டு....*
*தலைமைச் செயலகத்தில்*
*செங்கோலுடன்*
*வருகிறார்......*
*மறக்காமல் தன்மகன்*
*இராசேந்திரனையும்*
*வணக்கத்துக்குரிய*
*தலைவர் ஆக்குகிறார்....*

★ *கவனம் தமிழர்களே!*
*தமிழ் ஆட்சிமொழியாகட்டும்*
*குடும்பம் அல்ல....*
*மன்னர்கால*
*மாயைகள் அல்ல!*
*பொருள் உணர்ந்து*
*சொல்லைப்*
*புழங்குவோம்!* ◆

## தோழர்கள் சுப. வீரபாண்டியன் பெ. மணியரசன் இருவரையும் சிறையில் பார்த்தோர்

வேலூர் நடுவண் சிறையில் அடைப்பட்டிருந்த போது தோழர்கள் சுப.வீரபாண்டியனையும், பெ. மணியரசனையும் தோழமை அமைப்புகளைச் சார்ந்த தலைவர்களும் மற்றும் நண்பர்களும், தோழர்களும் பார்த்தனர்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் வாலா ஜாவல்லவன், பெரியார் திராவிடர் கழகத் தலைவர்கள் முன்னாள் அமைச்சர் ஆனூர் ஜெகதீசன், விடுதலை இராசேந்திரன் திருகேசவன், பாட்டாளி மக்கள் கட்சி வ.ஆ.அம்பேத்கர் மாவட்டச் செயலாளர் திரு. இளவழகன், வழக்குரைஞர் திரு. சண்முகம், ராணிபேட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வாலாஜா அசேன், வேலூர் தின இதயமுரசு ஆசிரியர். திரு. பன்னீர்ச்செல்வம் (இவர் கிட்டதட்ட நாள்தோறும் வந்து பார்த்தார்) மற்றும் வேலூர் தமிழ் அன்பர்கள் தமிழ் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் தியாகு, வவுனியன், சோலைப்பிரியன், தென்னரசு, மு.கருப்பையா, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தோழர்கள் ச. யோகநாதன், அ. பத்மநாபன், விஜேந்திரன் மற்றும் வழக்குரைஞர் பகத்சிங், பேராசிரியர்கள் குமரன், செல்வம், சுப.வீ. இல்லத்தார் தோழர். இருளாண்டி (த.த.இ.) மற்றும் பலர் சிறையில் பார்த்து ஆதரவு தெரிவித்தனர்.

### நீதிமன்ற வாயிலில் முழக்கம்

19-12-96 அன்று வாய்தாவிற்குத் தோழர்கள் சுப.வீயும், பெ.ம.வும் சைதாப்பேட்டை நீதிமன்றம் வந்தபோது நூற்றுக்கும் மேற்பட்ட தமிழின உணர்வாளர்கள் நீதிமன்ற வாயிலில் நின்று கைதைக் கண்டித்து முழக்கமெழுப்பினர். தமிழ் தமிழர் இயக்கம், த.தோ.பொ.க., உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் தமிழ்ச் சான்றோர்பேரவை, பா.ம.க., பெரியார் தி.க. மற்றும் பலதமிழ் அமைப்புகள் சார்பில் தோழர்கள் இதில் கலந்துகொண்டனர். இருவர்க்கும் துண்டுகள், லுங்கிகள் அணிவித்தனர். ◆

படிப்பகம்

www.padippakam.com



## கவிஞர் இன்குலாப் எழுதிய கவிதையின் சென்ற இதழ் தொடர்ச்சி.....

★ வணக்கம் என்ற
சொல்லுக்கு வருகிறேன்.
ஒருவருக் கொருவர்
மரியாதை நிமித்தம்
பரிமாறிக் கொள்ளும் சொல்
வணக்கம் என்பது.

★ உங்களுக்கு நான்
வணக்கம் என்பதால்
எனக்கு நீங்களும்
வணக்கம் என்பதால்
நம்மில் யாரும்
கடவுளும் இல்லை.....
நமக்கு ஏது
கடவுளும்
வெங்காயமும்!

★ புரட்சித் தலைவரும்
புரட்சித் தலைவியும்
அரசியல் அகராதியில்
புகுந்தது போலவே......
மாண்புகளை அடுத்து
வணக்கத்துக்குரியதுகளும்
நோவில்லாமல்
நுழைந்து கொண்டிருக்கின்றன.

★ வாக்குகள் வேண்டிப்
பதவிக்கு வருவோர்
மனசுக்குள் கனக்கும்
அரியாசனங்களும்
அதன்
ஆண்டாண்டுத் தூசியும்
கையில் செங்கோல்
தலைக்கு மணிமுடி!
ஆட்சியில் தொடர
இளவரசர்கள்!

★ வணக்கத்துக்குரியவர்
நம்முள் யார்? எவர்?
நம்பினோர்க்குக்
கடவுள்.....
நாத்திகருக்கு
யாருமில்லை!

★ எந்தப்பதவியில் யார் இருந்தாலும்
திரு என்ற அடைக்குமேல்
அடைமொழிசேர்ப்பது,
தேவைக்குமேல் செய்யும்
மரியாதையாகும்!

★ தலைவர்களை அவர்தம்
பெயர்களால் விளிப்போம்!

★ வணக்கத்துக்குரியவர்
ஆளுநர் இல்லை!
முதல்வர் இல்லை
நகரத்தலைவரும் இல்லை( மேயர்)
இல்லவே இல்லை!
வணக்கத்துக்குரிய என்ற
சொல்லோ

★ மன்னராட்சியின்
துருப்பிடித்த தொடர்ச்சி!
ஒப்புக்கு மக்களாட்சி....
உள்ளுக்குள் மன்னர்மானல

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க...)

படிப்பகம்